உ

திருச்சிற்றம்பலம்.

மாயாவிசித்திரத் தோற்றம்.

திருத்துருத்தி இந்திரபீடம்
காபாத்திர சுவாமிகள் ஆதீனம்
ஸ்ரீமான்
தண்டலை சுப்பராய ஆசாரிய சுவாமிகள்
மாணாக்கர்களில் ஒருவரான

மதுரை,
எஸ். கந்தசாமி பிள்ளையவர்கள்
எழுதியது.

மதுரைத் தமிழ் வித்வான்
ஸ்ரீ-நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களால்
திருத்தம் பெற்று

மதுரை, ஸ்ரீமீனும்பிகைப் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிரைட்] 1926. [விலை அணு 3.

முகவுரை.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (குறள்)

ஞானவாசிட்டம் எனப்பெயரிய இந்நூல் சூர்யகுல வம்ச குரு சிரேஷ்டராகிய வசிட்டமாமுனிவர் ஸ்ரீராமபிரானுக்கு உபதேசித்தருளிய ஓர் அறிவு நூலாகும். செய்யுளும் உரையுமாயுள்ள இந்நூலில் அடங்கிய விஷயங்கள் ஒரு கடல் போன்றும், இதன் பயனறிந்துய்வார் ஒரு துளி போன்று மூள்ளாராகவே சர்வான்மாக்களும் இலகுவிற் படித்துணர்ந்து விவேக ஞானமுற்றுக் கைவல்ய மடையவேண்டுமென்ற நன்னோக் கொன்று பற்றியே இந்நூலைத் தனித்தனி சிறுச்சிறு காப்பியங்களாகத் தொகுத்து வெளியிடத் துணிந்தேம். இதிலடங்குவன லீலை கதையும், புசுண்டர் கதையுமேயாம்.

இதைப்படித்துணர்வோர்க்கு "இவ்வுலகமும் இதில் அடங்குவன அனைத்தும் ஒரு மாயா விசித்திரமாகத் தோன்றவே பின்னர் அவர்கட்கோர் சித்பிரகாசமான தத்துவஞானம் உதயமாம்" என்பதுபற்றி இந்நூல் அதனையும் ஒரு பெயரெனக்கொண்டிருக்கிறது.

தத்துவஞான உதயமென்பது பஞ்ச பூதங்களும், அதின் காரியமான பலஉலகும் சூரிய சந்திரர்களும், எழுவகைத் தோற்றங்களும், பிறப்பிறப்பு, நல்வினை, தீவினை, நரக சொர்க்கங்கள், போக்குவரத்து, அணுமகத்து முதலிய சர்வ தோற்றங்களும் உணர்வெளியின்கண் ஒரு கற்பனை மாத்திரமன்றி ஒரு சிறிதும் எதார்த்தமன்றெனத் தெளிந்து, விரிந்த மனதைக் குவிய வைத்துச் சர்வமும் "ஆன்மமயமாகிய நாம்" எனக் கண்டுய்வதேயாம்.

"அருமையா மநுடத்தேக மடைந்ததி லாண்மைதன்னை
மருவியும் யாவன்றன்சேர் மாசிலாப் பயனைவேண்டித்
தாணியின் முயன்றிடாமற் றவிருவ னவனையன்றி
யொருவனு மூடனுண்டோ வுள்ளவா றேருங்காலை" என்றபடி.

நாம் தெளியாமல் தாபத்திரயத்தில் கட்டுண்டு கிடக்கும் வரை இச்சை ஒழியாமல், தோற்றமும் மறையாமல் பிறப்பிறப்பின் கண் ஒரு சக்கரச்சுழல்போல் பிறந்திறந் துழலவே நேருமென் பது உள்ளங்கை நெல்லிக்கனி இலக்கெனக் கூறுமலே யமையும்

"வாராயேன் மகனேதன்னை மறந்தவன் பிறந்திறந்து
தீராத சுழற்காற்றுற்ற சேத்தைபோற் சுற்றிச்சுற்றிப்
பேராத காலநேமிப் பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத்தானேன் றறியுமவ் வளவுந்தானே" என்பதும்,

"விரிந்த மனது பிரவிர்த்தி, குவிந்த மனது நிவிர்த்தி" என்பதும் ஆன்றோர் வசனமும், தினந்தோறும் சுழுத்தியவத்தை யில் இவற்றை நாம் அனுபவிக்கின்றோமாகவே யுக்தி யனுபவ சம்மதமு மாமென்ப. மேலும் "இந்நூலை ஊன்றிப் படிப்போர்க்கு நிர்க்குண வஸ்துவாகிய இவ்வான்மாவைத் தவிர சகுண வஸ்து வாகிய சர்வாண்டங்களும் அவைகளில் தோற்றப்படுகிற சர்வநாம ரூபபேதங்களும் சுத்தாசுத்த அவஸ்தைகளும் ஒரு பிரமை யென்று தோன்றவே, பின்னர்ச் சர்வமும் சச்சிதானந்த ஸ்வரூப மாகிய ஆன்ம மயமன்றி மற்றொன்று மின்றெனத் தெற்றென்று தெளிதற்கிடமுண்" டென்பதே எமது துணிபு

இதனைப்பழம் பிரதியாகவே எமதன்பிற்குரியாரும் மதுரைத் தமிழ் வித்வானுமாகிய ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களைக் கொண்டு இதிலுள்ள கடின பதங்கள் இலக்கண வழுக்கள் முதலி யன நீக்கி, ஒரு சுத்தப் பிரதியாக்கித் தனித்தனி சிறு காப்பியங்க ளாக வெளிப்படுத்தலொன்றே "நற்கரும" மெனத் துணிந்து முதன் முதல் இதனை வெளியிட்டிருக்கின்றேமாகவே மேலும் எமது முயற்சி ஒரு முட்டின்றி மிக்குறுமாறு திருவருளைச்சிந்திக்கின்றேமாக.

இங்ஙனம்

எஸ். கந்தசாமி பிள்ளை,

ஸ்ரீமீனும்பிகைப் பிரஸ் மானேஜர், மதுரை.

உ

வசிட்டமுனிவர்
ஸ்ரீராமருக் குபதேசித் தருளிய
ஞானவா சிட்டம்.

லீலகதையின் வசனம்.

அந்தமும், சொற்பனமும், சடமும் இல்லாதது. நீண்ட யோக நித்திரையையுடையது. காண்பானும், காட்சியும், விடயமெனும் திரிபுடியானது உண்டாகி யடங்கும் இடமானது. பூதாகாயம் அல்லாதது. ஞானுகாயமான நிலைமையையுடையது. சித்தமும் புத்தியும் விரிந்த மனமுமாகிய இவைகள் நீங்கி மரங்களைப்போலப் பெற்ற உள்ளுணர்வையுடையது. பிரமாவும், விஷ்ணுவும், ருத்திரனும், சதாசிவனும், தேவேந்திரனும், சூரியனுமாகிய இவர்கள் உபசாந்தர்களாகின்ற காலத்தில் மேன்மையில்லாத உபாதிகளியாவையும் விடுபட்டும், பிரயோசனமில்லாத உலகமென்கின்ற இச்சையை விட்டும், ஞானமயமாகிய ஸ்வரூபமாகியும் மேலான நிர்விகற்ப ஸ்வரூபமாகியும் எங்கும் என்றும் பூரணமாய் நிறைந்திருக்கின்ற (சிவ) ஸ்வரூபமாயும் அத்துவிதமாயுமிருக்கும் பிரமரூபம். இதில்சந்தேகம் தீர்ந்து விஸ்ராந்தி யடையும்பொருட்டு ஒரு பழமையான கதையை இராமா நீ கேட்பாய் என்று வசிட்டமுனி சொல்லத் தொடங்கினர்.

இப்பூமியில் சத்துவகுண முதிர்ந்து விவேகம் பெற்றவனும், விஜயலெட்சுமி வசிக்கின்ற புயத்தையுடையவனும் ஆகிய பதுமனென்னும் ஓர் அரசன் இருந்தான். அவ்வரசனது மனதுக்கிசைந்த அவனது சாயை போன்ற குணத்தையுடைய லீலை யென்னும் பெயரையுடைய மனைவியானவள்

ஒருநாள் சதுர்வேதப் பிராமணர்களை அழைத்து என்னுடைய கணவன் சராமரணமில்லாமல் நல்ல எவ்வனமுள்ளவாய் எப்போதுங் கூடிச் சுகிக்க என்ன உபாயம் என்று கேட்டாள்.

அதற்கு அவ்வந்தணர்கள் செபதப முதலிய அனைத்தும் சித்தியைக் கொடுக்கும், மரணத்தை இயாவருக்கும் ஒரு பொழுதும் நீக்க முடியாது என்று சொன்னார்கள்.

லீலை, எனது நாயகன் இறத்தற்கு முன்பு நான் இறந்தால் எனக்கோர் வருத்தமில்லாமல் நிர்வாண சுகம் கிடைக்கும். எனது நாயகன் எனக்கு முன்னே இறந்தால் அச்சீவாத்மாவை இம்மனையில் வசிக்கும்படி செய்து அச்சீவன் என்னைச்சந்தோஷித்துப் பார்க்கப் பூரணானந்தத்தை அடைந்திருக்கவேண்டும். இந்நிலை வரும்பொருட்டு வேதார்த்தங்களைப் போதித்த சரஸ்வதியினது பாதங்களைத் துதித்துத் தோத்திரஞ் செய்வேனென்று சிந்தித்தாள்.

அப்படிச் சிந்தித்த பிரகாரம் தன்னரசனுக்குச் சொல்லாமல் நல்ல மந்திரங்களிலும் நல்ல சாஸ்திரங்களிலும் வல்லமையுடைய பெரியோர்கள் அனுக்கிரகஞ் செய்த மார்க்கத்தினின்று தேவர்களையும், பிராமணர்களையும் ஆராதித்து, மூன்று நாள் அன்னமின்றி நான்காந் தினத்தில் ஓர்போது கொஞ்சமாகப் புசித்து இனிமையான நிட்டையில் பத்து மாதமிருந்தாள்.

ஆகாயத்தில் தோன்றிய பூர்ணசந்திரனைப் போன்ற நிறத்தையுடைய சரஸ்வதியானவள் சந்தோஷித்து, லீலை முன் பிரத்தியக்ஷமாய், லீலையே! நீ விரும்பிய காரியம் என்னவென்று கேட்டாள். அந்த லீலையானவள் நீண்ட ஜனனமாகிய மனோதுக்கமென்கின்ற இருட்டை நீக்குகின்ற சூரி

யப் பிரகாசமேயென்று சரஸ்வதியின் பாதத்தைத் துதித்து, என் கணவனிறந்தால் அந்தச்சீவன் இவ்வீட்டிலேயே இருக்க வேண்டும், உன்னை நான் நினைக்குஞ் சமயத்தில் நீ என் முன்னே பிரத்தியக்ஷ மாகவேண்டும். அப்படி இரண்டு வரங்களையும் அனுக்கிரகிக்க வேண்டுமென்று கேட்டாள். சரஸ்வதியானவள் அங்ஙனமே கிருபையுடன் அனுக்கிரகித்துச் சுகமாய் எழுந்தருளினாள்.

அப்படியே கணங்களும், தினங்களும், வாரங்களும். பக்ஷங்களும், மாதங்களும், ருதுக்களும் சேர்ந்த வருஷங்களாகிய இவைகள் சேர்ந்த காலச்சக்கரமானது சுழன்று கொண்டு வேகமாகச்சென்றது.

ஆனந்தமானது எல்லையறும்படி லீலையானவள் இருந்த காலத்தில் தனது நாயகன் சிறிது தினத்தில் மரணமடைந்தான். அந்த லீலையானவள் சோகாக்கினியெரிக்கின்ற வெப்பம் பொறுக்கமாட்டாமல் இருந்த காலத்தில் சீவன் பிரிவதற்கு முன்னமே சரஸ்வதியானவள் பிரத்திக்ஷப் படாமல் ஆகாயத்தினின்றுகொண்டு, இந்த லீலையின் மோகத்தைக் கெடுத்தாள். "மரணமடைந்த அரசனைப் புட்பங்களினால் மூடி வைப்பாய், புட்பங்கள் வாடும், சரீரங்கெடாது, சீவனீங்காமல் சொர்னமயமான அந்தப்புரத்தை அடைந்திருக்கும். இவ்வரசனது புயத்தைப்பொருந்தி சீக்கிரத்தில் துக்கந்தீரக் கடவாய்" என்று அருளிச்செய்து சரஸ்வதி மறைந்தனள்.

கெடாத அமூர்த்தமான சரஸ்வதியின் வசனப்படிக்கு அரசனைப் பூவினால் மறைத்து வைத்தாள். பிரியாத உயிரையுடைய லீலையானவள் மறுபடியும் சரஸ்வதியைச் சிந்தித்தாள். சரஸ்வதி சீக்கிரத்தில் வந்தாள். அப்படி வந்த சரஸ்வதியை நோக்கி, எனது நாயகனைப் பிரிந்து வாழ்வது

கூடாது. அவர் சேர்ந்த விடத்தில் என்னையும் சேர்ப்பா யென்று லீலை சொன்னாள்.

அதற்குச் சரஸ்வதியானவள் "மனாகாயம், பூதாகாயம் ஞானாகாயம் என்று மூன்றுண்டு. அதில் முந்தின இரண்டும் நீங்கி, மூன்றாவது மகத்தான ஞானாகாயமானது காணப் பட்ட ஒருவஸ்துவில் அடைதலைவிட்டு மிகவும் தெளிவாகப் பக்கத்திலிருக்கின்ற ஒரு வஸ்துவை அடைந்தால், அப் போது மத்தியகதமான சிதாகாயமாகும். சங்கற்ப சமுகங் கள் ஒழிந்தால், சாந்தமாகவும், பரிசுத்தமாகவும், சகங்களை னைத்துமாகவும் விளங்குவதாகிய சிற்பிரகாசம் உதயமாகும். இவ்விடத்தில் அற்பமும் திரிஸ்யங்களில்லையென்றும், வெறும் பொய்யென்றும் அறிந்தால் அப்பொழுது அந்த அறிவால் அச்சிதாகாயத்தை அடையலாம். நமதுகிருபையினால் அச் சிதாகாயத்தை நீ அடையக் கடவாய்," என்று சரஸ்வதி அனுக்கிரகித்துச் சென்றாள்.

பின்பு அந்த லீலையானவள் நிர்விகற்ப சமாதியை அடைந்து, தாம்வசித்திருக்கிற கூட்டைவிட்டு நீங்கிய பறவை களைப்போல அவாவுகின்ற மனமானது களங்கமும் விருப்ப மும் பெற்றுள்ள சரீரத்தை அந்த க்ஷணத்தில் நீக்கினாள்.

அழிவை யடையாத ஞானாகாயமத்தியில் ஒரு பெரி தான பட்டணத்துக்கு விருப்பமுள்ள புருடனைபடியால், பதினாறு வயதுடைய வீரமுள்ள அரசனைச் சிம்மாதனத் தின்மேல் அரசர்களும், நான்கு படைகளும், மிகுந்த ஆசை யையுடைய ஸ்திரீகளும், புகழும்படி வீற்றிருந்த தனது பிராண நாயகனை அந்த லீலையானவள் பார்த்தாள். அவனி ருக்குஞ் சபையை அடைந்தாள். மிகவும் அதிசயித்தாள். சபையைச் சூழ்ந்திருக்கின்ற மேற்கு வாயலில் அரசர்களும்,

கீழ்வாயலில் முனீஸ்வரர்களும், வேதங்களில் வல்லமையுடைய பிராமணர்களும், தென்வாயலில் ஸ்திரீகளும், உத்தர வாயலில் சதுரங்க சேனைகளும், ஏனையோரும் சூழ்ந்திருக்க, நல்ல பூமியும், மலைகளும், நகரங்களும், நாடுகளும், நதிச்சமுகமும் ஆகிய பலவஸ்துக்களையும் பார்த்தாள். மின்னற்கொடிக் கொப்பாகிய அந்த லீலையானவள் மறுபடி திரும்பித் தனது அந்தப்புரத்திலுள்ள சரீரத்திற்புகுந்து வெண்ணிறத்தையுடைய சரஸ்வதியைப் பிரியத்தோடும் சிந்தித்தாள்.

பிரத்தியக்ஷமாய் மேலான சிங்காசனத்தில் எழுந்தருளிய சரஸ்வதியை நமஸ்கரித்து "எனது நாயகனுக்கு இறந்தபின் இத்தோற்றமான பிறப்பைக்காட்டிலும் முன்போலவே பந்தமுள்ள மயக்கமே வடிவாயும், அமூர்த்தமாயும் இருக்கின்ற வேறான பிறப்பானது எப்படியுண்டாயிற்று. இந்த உலகத்தினுடைய சத்தியத்துவப் பிரமை நீங்கும்பொருட்டு அனுக்கிரகிப்பாய்" என்று லீலை கேட்கவும், சரஸ்வதியுரைப்பாள்.

முன் உயர்வான பிராமண சிருட்டியின் அரசப் பிராந்தி (மயக்கத்தி) னளவே பதுமனென்னும் வடிவமான இந்தச் சிருட்டியானது வேறாகத் தோற்றினதாகும். அவ்வண்ணமே உனது நாயகனுக்கு இரண்டாவதான (விடூரத) ஜனனம் உண்டாயிற்று. இதன் வரன்முறையை நான் உனக்குத் தெரிவிக்கிறேன். அதை நீ தெரிந்துகொண்டு மேற்சங்கையுண்டானால் கேள்.

களங்கமற்ற நிர்மலமான சிதாகாயம் ஒன்றுண்டு. அதின் ஓர் பக்கத்தில் மாயாமண்டபம் (அநிர்வசனம்) ஒன்று இருக்கிறது. சொல்லுதற்கு அரிய ஆகாயமென்கின்ற மயிலிறகின் திரையினால் மூடியிருக்கும் மகமேருவாகிய கிளைகளை

யுடைய சொர்னஸ்தம்பத்தில் வசிக்கின்ற இந்திரன் இந்தி ராணி முதலிய ஸ்திரீகள் உலகபாலர்கள் போன்ற சித்திரப் பதுமைகள் பதித்திருக்கும்.

ஒரு பக்கத்தில் பிரிதிவியென்னும் புற்றுக்களுண்டு. அவ்விடத்தில் வசிக்கின்ற சத்தகுலாசலங்களென்கின்ற ஓடு களும் உண்டாயிருக்கின்றன. இது ஆசையுள்ள மரீசி முத லான புதல்வர்கள் சூழ்ந்திருக்கின்ற வார்த்திகமும், பரிசுத்த முள்ள பிரமாவாகிய ஒரு புருடன் வசிக்கின்ற இடமுமா கும். பெருமை பொருந்திய மகாகாசமென்னும் வேணுவில் சஞ்சரிக்கின்ற அழகிய விமானத்தையுடைய தேவகீடங்களி னது கூட்டங்கள் பொருந்தியிருக்கும், சமீபமாகிய ஆகாயத் தில் வசிக்கின்ற சித்தர் கூட்டமாகிய மசகங்கள் சப்திக்கின்ற கும்ப மென்கின்ற சப்தம் சூழ்ந்திருக்கும். தேவர்களும் அசு ரர்களும் ஆகிய துஷ்டப் பிள்ளைகளினது செருக்குற்ற விளையாட்டி லுண்டாகிய சப்தம் மாறுமலிருக்கும். இப் படியான ஒப்பற்ற மகாமாயா மண்டபத்தில், ஒரு பக்கத்தில் ஒரு திக்காகிய ஒரு கிரகமத்தியில் பெருமை மிகுந்த வரை யென்கின்ற ஒரு பூமியில், பருவதங்களினுலும் நதிகளினு லும் கானகங்களினுலும் மேலாகிய வளப்பம் நிறைந்த கிரிக் கிராம மென்னும் ஒரு பட்டணமுண்டு. அதனிடமாக அக் கினியோத்திரத்தையுடைய பிராமணர்களில் மிகவும் மேன் மையான ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் அழகிலும், செல்வத்திலும், வயதிலும், அடக்கத்திலும், செய்கையிலும், கல்வியிலும் வசிட்டனுக்குச் சமானமானவன். ஆனல் அவ் வசிட்டனென்று சொல்லும்படியான குணம் பொருந்திய அறிவையுடையவனல்லன். நாமத்தினுல் இப்பிராமணனையும் வசிட்டனென்று சொல்லலாம். அவனது பதத்தைப் பணி கின்ற அருந்ததிக்குச் சமானமான நாயகி ஒருத்தி உண்டு.

ஆனால் இவள் அவ்வருந்ததியின் அறிவையுடையவளல்ல. பூலோகத்தில் இவளும் தெய்வலோகத்தில் அவளுமாம்.

இவ்வருந்ததி புருடன் என்று சொல்லிய இவ்வசிட்டனைவர், அம்மலையில் விளங்குகின்ற தாழ்வரையில் முன்னொரு நாளிருக்க, அவ்விடத்தில் ஒரு கிரீடத்தையுடைய அரசன் வேட்டை நிமித்தம் படைகளுடன் அவர் முன்னே வந்தான். அவ்வரசனைப் பார்த்து, ஆச்சரியம் ஆச்சரியம், அரசர்கள் செல்வம் மிகவும் நன்மையாம். அழகான உலகத்துக்கு இராசாவாய்ப் படைகள் சூழ்ந்துவர, இரண்டு சாமரங்களைவீச, எக்காலத்தில் சுகத்தை அடையப் போகின்றேம், வெற்றிக் கொடிகள் நெருங்கும்படி வெண்கொற்றக் குடை நிழலில் சுகித்து பெண்களுடைய செஞ்சாந்தணிந்த ஸ்தனங்களில் பொருந்தியிருப்பது எந்தநாள், முடிவில்லாத இப்பிரயோசனத்தை எப்பொழுது அடைவோமென்று நிறைந்த ஆசையுடன் அரசனைக்கண்ட அன்று முதலாகச் சிந்தித்த மனதை யுடையவனாய்க் கெடாத தனது கன்மத்திலிருந்தான். அவன் தேவியானவள் உன்னைப்போல என் பாதத்தை வணங்கி என்னை விரும்பிக்கேட்டுக்கொண்டபடி சிவன் அவ்வீட்டினின்றும் நீங்காத வரத்தையும் கொடுத்தேன். பிராமணனாகிய வசிட்டனும் இராசபோக இச்சையோடு மரணத்தை அடைந்தான்.

அவ்வசிட்டனானவன் கிரகாகாயத்தில் சிவாகாய வடிவமாயிருந்தான். ஞானகாய வடிவமான அவ்வசிட்டனே முன்னாளில் வளர்ந்த இராச செல்வத்தில் அழுந்திய மனோசங்கற்பத்தினால் அரசனாய்ப் பொருந்தியிருந்தான். தவத்தையுடைய பிராமணன் பிரேதமானதைக்கண்ட நாயகியானவள் துன்ப மடைந்து, தன்மனதில் இரண்டு விதமாக

நினைத்துத் தனது தூல சரீரத்தைச் சமானமாகிய நாயகனுடன் பிரேதமாகத்தள்ளி, மேலான சூட்சும சரீரத்தோடும் அந்த நாயகனுடன் போய்ச்சேர்ந்தாள்.

இத்தன்மையான பிராமணனுடைய புத்திரரும், வீடும், பூமியும், வனங்களும், மலைகளும், சகலமும் அவ்விடத்திலிருக்க, அவருக்கு அவ்விடத்தில் சீவன் பிரிந்து எட்டு நாளாகும். சிதாகாயரூபமான சீவனும் அந்த வீட்டிலிருக்கும். முன் சனனத்தில் உனக்கு நாயகனாகிய அந்தப் பிராமணன் அரசனாகிப் பொருந்தினான். அப்போது பரிசுத்தமாகிய அருந்ததி யென்னும் நாமமுள்ள பிராமண ஸ்திரீயாகி அவன் மனைவியாகிய அந்த மடமயில் போன்ற பெண்ணானவள் நீதான். புதுமையான சக்கரவாகப் புள் சேர்க்கை போலவும், பூமியின்கண் இடது பாகத்தில் சேரும் பார்வதி பரமேஸ்வரரைப் போலவும் மிகவும் அன்புள்ள ஸ்திரீ பூமானாக இருவருமாய் இவ்விடத்தில் அரசாட்சி செய்கின்ற நீங்கள், அந்த அருந்ததி வசிட்டரே.

ஆகையால் மூன்றாம் பிறைபோன்ற நெற்றியையுடைய லீலா! முன் பிராமண சிருஷ்டியின் இராசாவாக நினைத்த பிராந்தியைக் (மயக்கத்தைக்) கூறினோம். இப்பத்மசிருஷ்டியும் பிராந்தி மாத்திரமேயாம். சலப் பிரதிபிம்ப ஆகாயம் போன்ற வடிவமான விரோத சனனம் உனக்கு,ப்பிரகாசமாகத் தோற்றியது என்று லோகமாதாவாகிய சரஸ்வதி சொன்னாள்.

இவ்வசனத்தைக் கேட்ட லீலையானவள் தேவீ! அசத்தியமே சொன்னாய். இஃது எப்படிப் பொருந்தும்? பிராமணன் மனையில் வசிக்கின்ற சீவன் எங்கேயிருக்கின்றது? இவ்விடத்து வேறாயிருந்த நாங்கள் சேர்ந்த தெங்கே? முன்

பொருந்திய அந்த வேறுலகத்திருக்கின்றவர்களும், அந்த நெருங்கிய மலைகளும், பத்து திக்குகளும் முழுதுங் கூடிவந்து இனிமையாக இவ்விடத்தில் நாங்களிருக்கின்ற வீட்டுக்குள் பொருந்தும் வழி எவ்விதம்? மதர்த்த இந்திரன் யானையானது ஒரு கடுகுனுடைய ஒருபக்கத்தில் கட்டுப்படுமோ? மகமேருவானது வந்து ஒரு தாமரை விதைக்குள் நுழைந்திருந்து வண்டின் குஞ்சால் நெறியுமோ? கொசுவானது கோபித்து அடித்துப் போர்செய்ய சிங்கங்கள் பலவற்றுடன் பயந்து ஒர ணுவுக்குள் நுழையுமோ? சொல்லிய உனது வசனம் இவ்வண்ணமே ஒன்றுக்கும் பொருந்தாது. குற்றமற்ற சரஸ்வதியே என்று லீலைகூறவும் தேவிசொல்லுகிறுள்.

நாம் பொய் சொல்லவில்லை. இதனுண்மைமைச் சொல்லக் கேட்பாய். என்னையொத்தவர்கள் ஈஸ்வர நியதியை சத்தியமாகக் கொள்வதேயன்றி பேதிக்கார்கள்.

பிராமணனுடைய சீவனுனது அவன் நகரத்திலுள்ள மனையில் அதிரிஸ்யமாய் (சுழுத்தியவத்தையைப்போல) வசிக்கின்றது. இந்நாடுகளும் இப்பத்மவரசாங்கமும் ஞானுகாய ரூபமேயாம். இவையனைத்தையும் மைதீட்டிய கண்களையுடைய லீலாய்! அச்சிதாகாயமே வடிவமாகிய அவ்வசிட்டனே சந்தோஷித்துத் தன் மனுகாயத்திற் பார்க்கின்றுன்.

பழமையாகிய அந்த ஞானஸ்புரணம் இப்பொழுது உங்களுக்குத் தோன்றுமல் வேறுகித்தோன்றும். சாக்கிர நினைப்பு சொற்பனத்தில் தோற்றுத தன்மையைப்போல அந்தவசிட்ட ஸ்மரணத்தின் தன்மைதோற்றுமல் இப்பதும ஸ்மரணத்தின் தன்மை தோற்றும். தானுகிய சத்தினுல் பிரகாசிக்கின்ற முன்னே சொல்லிய வியாபகமான ஞானுகாயத்தில் ஒருநணிந்தபக்கத்தில், மனுசங்கற்பத்திலும், கண்

ணுடியிலும் அடுத்த சாயை பிரகாசிக்கின்றதுபோல கடின மாயிருக்கின்ற இவ்வுலகமானது தோற்றிக்கொண்டிருக்கும்.

பிரகாசமாத்திரமாய்ப் பொருந்திய உலகங்களனைத்தும் தெளிந்தபரமாணுவாகிய ஞானஸ்வரூபத்தில் பிரகாசமாக உள்ளுக்குள்ளே நெருங்கியிருக்கும். ஆதலினால் முற்கூறிய பிராமணனிருந்த பூமிமுதலானவைகளும் ஞானத்துள்ளே தோற்றும். பிரத்தியக்ஷமாக இதைத்தெரிவாயென்று சரஸ்வதி சொன்னாள்.

லீலையானவள் அந்தப் பிராமணன் எட்டாந் தினத்தில் மரித்தானென்று சொன்னாயல்லவா? எங்களுக்கு எளிதாக அநேக வருஷங்கள் சென்றுவிடக் காரணமென்ன? வென்று கேட்டாள். திரும்பவும் தேவி யுரைக்கின்றாள்.

முன் சொல்லிய சித்து விலாசமாய் விளங்கிய தேசத்துக்கு விபத்துவம் (நீண்டதன்மை) இல்லாததுபோல, காலத்துக்கும் அற்பமும் விபுத்துவம் இல்லை. மாயா விகற்பம் இல்லாத ஞானப் பிரகாசத்தினது தோற்றுதன் மாத்திரமன்றி, காலதேசத்தின் அளவு வேறில்லை. மித்தியா மரணத்தினால் ஒரு க்ஷணம் பிரக்ஞாபங்கம்வரப் பிரிந்து போன சீவன் முன் சரீர பாவனையை மறந்து இச்சனனத்தில் பொருந்திய பாவனையை அடையும். எப்படியென்னில், "இவ்விடத்தில் இது நம்மைத் தாங்குகின்றது; இதனால் சுமக்கப்படுகின்றவன் நாம்; நமது சரீரமாகிய இது பருக்கின்றது; இவன் நமது தந்தை; இறப்பது இத்தனை வருடத்தில்; இங்கு இது விருத்தியாகின்றது; இவர்கள் நமது பந்துக்கள்; இது பிரியமாய் வசிக்கின்ற ஸ்தானம்" என்று மிஞ்சுகின்ற மித்தையாகிய மரண மூர்ச்சையின் தன்மை சீவன் தெளிந்தபின் சிந்திப்பன். ஆகையினால் முற்சென

னம் மறைபட்டு இப்பிறப்பு அறியப்பட்டது என்று சரஸ்வதி சொன்னாள்.

லீலையானவள் சரஸ்வதியை வணங்கி, ஞானமாகிய கண்ணை நீ அனுக்கிரகஞ் செய்ய ஆச்சரியம்! ஆச்சரியம்! பூரணமாகத் தெளிந்தேன். இதயக் கிரந்தியாகிய இச்சை தீரும்படி இவ்வசிட்டாதிகள் வசிக்குமிடத்தைக் காண்பிக்க வேணுமென்று கேட்டாள்.

தேவ ஸ்வரூபியாகிய சரஸ்வதி சொல்லுவாள். அதைக் காண்பதற்கு இவ்வினை வடிவமான தூல சரீரம் தடையாகிறது. இச்சரீரத்தை மறந்து, வெளிப்பார்வையில்லாமல் விளங்கக்கூடிய ஞானப் பிரகாசமாகியும் சத்தாகியுமிருக்கின்ற அவ் வானந்தபோதமே ஸ்வரூபமாய் மாயாமலத்தை நீக்குவையாயின் அவ்விடத்தைப் பார்க்கலாம். தங்களுக்கென்று ஒருருவம் பிரமத்தையன்றி வேறில்லை. சுவர்ணம் ஆபரணமாய் வந்த வகையைப்போல் உங்கள் மயக்கத்தினால் உலகமாக அறியப்படுகிறது. உண்மை ஞானத்தைப் பயிர்ச்சி செய்கின்ற சுத்த வாசனையைத் தவிர உலகங்கள் ஆத்மஸ்வரூபமாகாது. ஏ லீலா! மிருதுவாகச் செய்கின்ற சகவிருத்தியை நீக்கினாயில்லை. ஆகையால் உன்னால் அது அடைவதற்கு மிகவும் அரிதாகும். பரிசுத்தமான பிரமத்தில் எம்போன்றவர்களிருப்பது உன்போன்றவர்களுக்குத் தொடரா நின்ற மனோரூபமாக வைத்திருக்கின்ற சூட்சும சரீரம் மிகுந்த பாவனையினால் வளர்ந்து தூலசரீரம் ஆய்விட்டது.

பனிக்கட்டியானது சூரிய கிரணத்தினால் கரைந்து சலமாகின்ற முறைமைபோல, உனது மெய்ஞ்ஞானத்தைக் குறித்துப் பார்ப்பதினாலும், வாசனையை விடுதலினாலும், ஆதிபௌதிக சரீரத்தைவிட்டு, நிலவரமான ஆதிவாகிக

சரீரம் நிலையாக நிற்கும். அந்த நிலையே சீவன் முத்தி யுமாகும். பூரணஞானமே நிறையும். உனது இச்சரீரத்தை அந்தமட்டும் நிறுத்தி, ஆதிவாகிக சரீரத்தால் முந்தின சிருஷ்டியைப் பார்ப்பாய் என்று சரஸ்வதி அநுக்கிரகிக்க, அந்தப்பிரகாரம் முயற்சிக்குந்தன்மை என்னவென்று லீலை யானவள் கேட்டாள்.

சரஸ்வதியானவள் சிரவணமும், மனனமும் நிறைந்த நிதித்தியாசனமும், அப்பழமையான வஸ்துவினிடமான நிஷ்டையாய் ஆனந்தமும், நிலையான சகலத்தியாகமும், நிரா சையும் பூரணமாய் நீண்ட உலகமென்பது எப்பொழுதும் ஒன்றுமில்லை யென்று, வேதநூல் மார்க்கத்தினால் யுத்தியாய் அப்பியாசியானவர்கள் அனுபவமாய் அறிவார்கள்.

நான் என்றும், இது வென்றும், விளங்கக்கூடிய உலகங் கள் இந்தச்சிருஷ்டியாதியில் உண்டாகாதபடியினால் எப்பொ ழுதும் இல்லவே இல்லை யென்று தெளிந்த ஞானமும், திருசிய திருஷ்டி நீங்கிப் பிரகாசிக்கின்ற ஞானத்தினால் ராகத்துவேஷாதிகளென்னும் சத்துருக்கள் பிரிந்திட இன்ப மும் வந்தடையுமென்று அப்பியாசமாகவே பிரமாப்பியா சிகள் தொடர்வார்கள்.

திரிஸ்ய ஞாபகமில்லாத அறிவே சைதன்யமும், மேல டைகின்ற ஆத்ம லாபமுமாய்ச் சிந்தித்து, அப்பிரம நிச்ச யத்தை அப்பியாசஞ் செய்வதே நிர்வாணசுகம் என்றும், பரிசுத்தமான ஞானோதய மென்றும், அந்த இரவில் பேசின சரஸ்வதியும் லீலையும் சரீர வாதனையின்றி ஸ்வரூபசமாதி யில் பொருந்தி நிச்சலமாயிருந்தார்கள்.

பத்தங்குலப் பிரமாண மென்னும்படி ஞானாகாரமான லீலையோடும், முன்புள்ள ஞானசரீரத்தால் பிரகாசித்த சரஸ்

வதியும் உயர்வாகிய ஆகாயத்தில் கிளம்பினார்கள். வெகு தூரம் நீங்கும்படி சென்று பொங்காநின்ற பிரளய மகா சமுத்திரத்துக்குச் சமானமான ஆகாயத்திற் சென்று இவை இவைகளைப் பார்த்தார்கள்.

அளவில்லாத தாகியும் தெளிந்திருக்கின்ற மிருதுவாகி யும் தென்றற் காற்றினது சுகம் தடையில்லாததாகியும் இருக்கின்ற சிதாகாயத்தில் மனோவேகத்திலும் வேகமாய்ச் சஞ்சரிக்கின்ற சித்தர்கள் நிறைந்து எட்டுத் திசைகளிலும் இராட்சசர்களும், பிசாசர்களும், கணக்கற்றிருக்கின்ற நாயைப் போலவும், காக்கையைப் போலவும், ஒட்டை யைப்போலவும், கழுதையைப்போலவும், வதனங்களையு டைய யோகினிகளும், வரிசையாக ஆகாயத்தில் சுழன்று, களிப்புள்ள நிருத்தமிடுகின்ற இடாகினிக் கூட்டங்களும், வேகமுள்ள வாயுவினால் சஞ்சரிக்கின்ற வெண்மையான கங்காநதியும், சுவரில்லாத வீட்டில் பொருந்தி வீணைகானத் தில் தெளிகின்ற நாரதர் தும்புரு கானங்களும், எழுதப்பட்ட சித்திரத்தைப்போல சத்தமில்லாமல் வருஷிக்கின்ற கற் பாந்த மேகங்களும், பெண்களுடைய கூட்டங்களும் உண் டாகி அளவில்லாத பதின்கடிகை தூரங்களில் எவர்க்கும் அடையக் கூடாததாகியும், பாடாணத்துக்கொப்பாய் மிகவும் கெட்டியாகத் திரண்டிருக்கின்ற மிகுந்த கருமையான இரு ளையுடையதாயும், சீக்கிரமாகச் செல்கின்ற இரத்தத்தையு டைய சூரியனும் அக்கினியும், சமானமாகிய பிரகாசத்தை யுடையதாயும், சொல்லப்பட்ட இக்கூட்டங்கள் யாவையு முடைய பல்பல விடங்களிலும் தொடர்ந்து கொசுகின் பெருங் கூட்டங்கள் அத்திக்கனியினிடத்தில் சப்திப்பது போல எவ்விடங்களிலும் பிரமன் உண்டாக்கிய சீவர்கள் யாவையும் சேர்ந்திருக்கும் குணமுள்ள திரிபுவனங்களை

யுடைய சமானமில்லாத ஆகாயத்தைத் தாண்டினார்கள். திரும்பவும் ஒரு பூமியைச் சேரச்சிந்தித்து பிரமாண்டத்தைக் கடந்து வசிட்டனிருந்த லோகத்தில் கிரிக்கிராமமென்னும் பட்டணத்தை அடைந்து ஏவற்காரரும், உறவினரும், புத்திரரும் துன்பமாக வாடுகின்ற அப்பிராமணனது வீட்டில் நுழைந்தார்கள். அவர்கள் கண்களுக்குப் புலப்படாத சத்திய சங்கற்பத்தை அடைந்த லீலையானவள் வீட்டின் கண்ணுள்ளவர்கள் எங்களைப் பார்க்கக்கடவார்கள் என்று சங்கற்பஞ் செய்தாள்.

இலட்சுமியையும்பார்வதியையும் ஒத்த சரஸ்வதி, லீலா தேவிகளை வனதேவதைகளைப்போல இருக்கிறார்களென்று பந்துபுத்திரராகிய தாங்கள் தரிசித்துப் பூசித்தார்கள். அதில் முந்தின குமாரன் பார்த்து, "எங்கள் மாதா பிதாக்கள் மரிக்க நாங்கள் அடைந்திருக்கின்ற துக்கத்தை நீக்குவீர். மேலானவர்களைத் தெரிசித்தவர்களுக்குக் கிடையாத பயனொன்றுண்டா? பேரறிவையுடையவர்களே!" யென்று சொல்ல எதிரே பிரகாசிக்கின்ற லீலையானவள் அவர்களுடைய சிரசைத்தொட்டுத் துன்பத்தை நீக்கினாள்.

பின்பு சரஸ்வதியும் லீலையும் அவ்விடத்தில் அந்தரத்தியான மானார்கள். சகத்சத்தை இவ்வண்ணமாம். நினைத்ததைப்பார்த்து முடித்தோம். மேலுன்னுடைய கருத்தென்னவென்று சரஸ்வதிகேட்க அடைந்திருக்கின்ற சமாதியினிடமாய்ப் பார்த்த அரசசபையிலுள்ளவர்க ளென்னைக் காணாத வகையும் இவ்வீட்டிலுள்ளவர்கள் என்னைக்கண்ட வகையும் என்னவென்று தெய்வத்துக்குச் சமானமான லீலையானவள் சரஸ்வதியைக் கேட்டாள்.

அதற்குச் சரஸ்வதியானவள் "லீலையே! ஞானப்பியாசத்தினாலல்லாமல் துவிதத்தோற்றம் அத்துவிதமாகாது.

நானென்னும் பாவனையைப் பிரியாமல் நீ ஞானத்தை அடைந்தபடியால் சத்திய சங்கற்பமானது உனக்குண்டாக வில்லை. ஆதலால் அச்சபையிலுள்ளவர்கள் உன்னைக்காண முடியவில்லை. இப்பொழுது நானென்னும் பாவனை இறந்த ஸ்வரூபஞானத்தை உணர்தலினால் அபேதமாக நீ சங்கற்பிக்க இப்புத்திரர் முதலாயினோர் உன்னைப் பார்த்தார்கள்" என்று சரஸ்வதி சொன்னாள்.

உடனே லீலையானவள் "சரஸ்வதியே! உனது கிருபையினால் வெட்டவெளியாக எனது பூர்வ ஜென்மம் யாவையு மறிந்தேன். மூன்று குணங்களினால் உண்டான பவமும் நீங்கினேன். பிரமத்தினின்றும் வேறுருவமாய் நீங்கி எண்ணூறு சரீரம் நானாவிதங்களாய் எடுத்தேன். முன்னமே ஒப்பற்ற மாயா விகற்பத்தினாலுண்டான ஒப்பற்ற உலகங்களாகிய தாமரைப் புட்பத்தில் வசிக்கின்ற வண்டைப்போல் சகல உலகங்களிலும் சஞ்சரித்த வித்தியாதர ஸ்திரீயாகவும், வாசனையின் தீமையால் நரவடிவாகவுமானேன். மற்றொரு மாயாவிகற்பமான லோகத்தில் இந்திராணியாகவும், தழைகளை வஸ்திரமாகத் தரிக்கின்ற வேடஸ்திரீயாகவும், வலையை அறுத்த பறவையாகவும், சவுராஷ்ட்ர தேசத்து அரசனாகவும், கொசுவாகவும் பிறந்து இவை முதலாகிய பலசனனங்களில் உழன்று துன்பத்தையடைந்து சிறிக்கொண்டிருக்கிற சமுத்திரத்தின் அலையில் அலைகின்ற துரும்பைப்போல் மாயாவசத்தில் ஊர்த்த (மேல்) கதியும் அதோ (கீழ்) கதியுமாகக் கலங்கின என்னை முத்தி தீரத்தில் ஏற்றுவித்தாய்" என்று ஸ்தோத்திரம் செய்தாள். பின்னர் இரண்டு பேர்களும் ஆகாயத்தில் கிளம்பினார்கள்.

யோகமார்க்கத்தினால் ஆகாயத்திற்சென்று பதும அரசனிடத்தில் வந்து அவனது சவசரீரத்தைப் பார்த்துப் பின்பு

அப்புறஞ்சென்று இப்பதுமன் இரண்டாஞ்சனனமாகிய விடூரத அரசனை அடைந்தார்கள்.

அவ்வரசனுடன் எதிர்த்து வந்து கொடுமையான போரையுடையவனும் ஒப்பற்ற வேலாயுதத்தையுடைய சிந்து அரசன் யுத்தத்தைத்தொடங்கி, இரண்டு சேனைகளும் ஒன்றோடொன்று யுத்தம் பண்ணின. மயிலையொத்த சரஸ்வதி லீலையானவர்கள் ஆகாயத்திலிருந்து பார்த்தார்கள்.

அளவற்ற இருவர்சேனைகளும் நமனடுங்கும்படியாகக் கொடிய சண்டை பொருதுங்காலத்தில் எட்டிலொருபங்கு எதிரியினால் விடூரதன்படை மரித்தமாத்திரத்தில், மரித்தவர்களது பிரேதமலையினால் மறைந்தானோ அல்லது போரைக் கண்டு பயந்தானோ என்று சொல்லும்படி சூரியன் மறைந்து அந்தகாரம் நிறைந்தது. இரண்டுசேனையும் பிரிந்துபோயின. சத்துருவாகிய அரசனது சேனைநீங்க, மடியாத சில சேனையுடன் மனமுறிந்து திரும்பி, தளர்வையுடைய விடூரத அரசன் மேல்மாடியில் நித்திரைசெய்யவும், இந்தச் சரஸ்வதியும் லீலையும் அவ்விடத்தில்வர, பிரகாசம் பொருந்திய சந்திரனது அமுதகிரணத்தையொத்த இவர்கள் தேயுசினால் சிரமந்தீர்ந்து கண்களென்னும் தாமரை மொக்கு மலர, விடூரத அரசன் விழித்தெழுந்து தோத்திரம் சொல்லி வணங்கி முன்னேயிருந்த சரஸ்வதி, லீலையைப் பூசித்தான்.

சரஸ்வதியானவள் அவனது சமீபத்தில் நித்திரை செய்யும் மந்திரியால் இவ்வரசனுடைய நல்லவமிசபரம்பரையை லீலைக்குச்சொல்லும்படி எண்ணிக்கொண்டு, மந்திரியானவன் விழிக்கக்கடவதென்று சங்கற்பிக்கவும், அவன் அப்பொழுதே தன்னைக் கவர்ந்திருக்கும் நித்திரையை விட்டு, எழுந்திருந்து சரஸ்வதியைப்பார்த்து வணங்கினான்.

சரஸ்வதியானவள் அவனிடத்தில் கிருபைமிகுந்து இப் பூமிக்கரசாகிய இவ்விடூரதன் குலத்தின் பூர்வசரித்திரத்தைச் சொல்லென்றுகேட்டாள். அதற்கு மந்திரிசொல்லத்தொடங் கினான். “அரசரில் மதிக்கப்பட்ட வைவசுதமனுவின் வமிசத் தில் அரசனாகிய கும்பரதனானவன் இராசாதி ராசனாகிய பத்திரரதனைப் பெற்றான். அவ்வரசன் அகிலரதனைப்பெற் றான். இவ்வரசன் பிறகத்ரதனைப்பெற்றான். இவ்வரசன் சிந் துரதனை ஈன்றான். அவ்வரசனது புத்திரன் சைலரதனாம். அவ்வரசனுக்குப் புத்திரனாய்க் காமரதன் தோன்றினான். இப்படிப்பட்டவனுடைய புத்திரன் மகாரதனாம். இவனு டையபுத்திரன் போர் மிகுந்த மனோரதனாம். இவ்விடத்தில் இவன், அவன் பெற்ற விடூரதனான ராசாதி ராசனாம். இவ னுக்குத் தாயானவள் சுமுத்திரையென்னும் பெயரை யுடை யவளாம். பத்து வயதில் இவனுக்கு அரசாட்சியைக்கொ டுத்து மனது அடங்கிய பிதாவானவன் துறந்து தவவனத்திற் சென்றான். இவன் நீதிமார்க்கத்தால் பூமிபாலனம் பண்ணி வருகின்றான்” என்று சொன்னான்.

இராசாவை நோக்கி, ‘உனது முன் செனனத்தை ஞானக் கண்ணினால் இலேசாய்த் தெரிந்து கொள்ளக்கடவாய்’ என்று அன்பினுடன் தனது அஸ்தத்தினால் அவ்வரசனது சிரசைச் சரஸ்வதியானவள் பரிசித்து அனுக்கிரகித்தாள். உடனே தனது பகையாகிய மனதிலிருக்கின்ற மாயாந்தகாரம் நீங்கி, லீலையோடும் கூடிச்சுகிக்கின்ற பதுமவரசன் தனது வடிவ மாகப்பார்த்தான். ஆனந்தம்பொருந்த அதிசயித்தான். மகா மாயையானது இருந்தவிதம் என்னவென்று சொல்லுவே னென்றான். மாதாவாகிய இவர்களால் மாயையைத்தெரிந்தே னென்று சிந்தித்து, அவர்கள் பாதத்தைச் சிரசின் மேற் றரித்து போன சனனத்தின் சரீரம் நீங்கி ஒருநாளாக இருக்

கிறது. இச்சரீரத்தில் வந்தபின்பு அதிகமான எழுபது வயது நடந்தபடியால் நடந்தசகலமும் தெரிந்தேன். இதென்ன மாயா விசித்திரமென்று அரசன் கேட்கவும், கிருபையே வடிவமாயுள்ள சரஸ்வதி அனுக்கிரகஞ்செய்வாள்.

"மரணமென்ற பெரியமயக்கம் வந்தபின்பு அக்காலத்தில் அவ்விடத்திலேயே சனனமென்கின்ற மகாமோகமானது மிகவும் உண்டாயிருக்கும். ஆகாயத்தைப்போல பரிசுத்தமாக நிறைந்த சிறப்புடைய உன் மனதில் செய்தொழிலாகிய மயக்கமே பார்க்கக்கூடிய நெருங்கிய எழுபது வருடமானது உனக்கு நீங்கினதென்பதை நீ அறிந்துபார்ப்பாய்.

ஒரு முகூர்த்தத்தில் அநேக காலம் வருகின்ற சொற்பனத்தை யொத்திருக்கும். நீங்கிய ஆயுளானது குணம்பொருந்திய மாயையின் விகற்பத்தினுல் நானுவிதமாகச் சாக்கிரத்தில் விரிந்து தோற்றும். மிகுந்த சனனமரணங்கள் எப்பொழுதும் உனக்கில்லை. உண்மையான ஞானமே உனக்கு நிஜரூபம். அந்தமில்லாத பரமபதத்தில் இருக்கின்றுய். உலகங்கள் யாவையும் பார்த்தும் ஒன்றையும் பாராய்.

எல்லாமாயிருக்கின்ற சுபாவத்தினுலும் உனது அறிவினுலும் உனது ஆத்மஸ்வரூபத்திலிருந்து பிரகாசிக்கின்றுய். பேசத்தெரியாத குழந்தைகள் தொட்டிலிலிருக்கும் பருவத்தில்பிடித்த பிசாசானது மயானத்தில் நீங்குகின்ற பழமையைப்போல தீமையையுடைய மூடர்களுக்கு உலகமானது சத்தியமாகத் தோற்றும். சுவர்ணமென்று அறியாதவர்கள் அப்பொன்னை ஆபரணமென்று சொல்லுவார்கள். அதுபோல ஸ்வரூப திருஷ்டியில்லாதவர்கள் அதனை உலகமென்று சொல்லிக்கொண்டிருக்கிருர்கள்.

நான் எனதென்னும் அகங்காரமுதலாகப் பாராநின்ற உலகங்கள் யாவும் நீண்ட சொற்பனமாம். உலகத்தில் தோற்றப்பட்ட வஸ்துக்களும் சொற்பனத்தில் காணுநின்ற வஸ்துக்களாம் என்று தேர்ச்சியடைவாய். அப்படிப்பட்ட வஸ்துக்களெல்லாந் தோன்றாத ஞானமே ஸ்வரூபமாய் எவற்றிலும் கூடித்தொழிலில்லாத நிறைவாய், மகத்தாய், பரிசுத்தமாகிய பரமாகாயமே உள்ளது. எல்லாமாகியும், எல்லாம் உடையதாகியும், சத்திகளெல்லாம் இருக்கின்ற ஸ்வரூபமே பழுதுபடாமல் காலகன்ம பரிபாகத்தினால் எந்தவிடத்தில் எப்படித் தோன்றுமோ அந்தவிடத்தில் அவ்வண்ணமே தோன்றும். குற்றமற்ற உண்மையான ஞானநிலையை லீலை நிமித்தம் நாம் உபதேசிக்க நீயடைந்தாய். கெடாத தத்துவத்துடன் தெளிந்தாய். நாங்கள் ஏகுதும்" என்று சரஸ்வதி சொன்னாள்.

இவ்வனுபவத்தைப் போதிக்கச் சிரவணஞ்செய்த விடூரதன் "என்னை யாசகமாக அடைந்தவர்களும் வேண்டியதைப் பெறுவார்கள். புதுமையான சிந்தாமணியை யொத்த உங்களை வணங்கித் தோத்திரம் செய்தவனாகிய நான் அடைய வேண்டியதை அடைதல் ஆச்சரியமாமா! முன்னிருந்த பதும சரீரத்தை யான் எப்பொழுது அடைவது" என்று கேட்க, "இந்தயுத்தத்தில் நீ மரிப்பாய், மரித்தால் அச்சரீரத்தை அடைவாய்" என்று சரஸ்வதி அனுக்கிரகித்தாள். உடனே மேல்வீட்டில் ஒருவன் வந்து "அம்புவருடஞ்சொரிந்து வருகின்ற நிறைந்த சேனை சமுத்திரமானது எவ்விடத்தும் நிறைந்திருக்க வெம்மையாகிய அக்கினிச்சுவாலையினால் பட்டணம் சாம்பலாக வேகின்றது. இவ்வதிசயத்தைக் காணவில்லையோ, பலம்பொருந்திய அரசனே! என்று சொன்னான். அச்சமயத்தில் பகைவர் படையானது மூன்று

உலகங்களும் நடுங்கும்படி கெற்சிக்கின்ற சப்தத்தைக் காது செவிடுபட அரசன்கேட்டான்.

சத்துருக்களின் படையானது சப்தமும், அலைவுற்ற லறுநின்ற பட்டினத்திலுள்ளவர்களின் சப்தமும், இடியைப் போல எதிர்த்தெழ வடவாக்கினியைப்போல சப்திக்கப் பட்ட அக்கினியினது தூமமானது எவ்விடத்துஞ் சூழ்ந்து கொள்ள நேத்திரமும், சுரோத்திரமும் அழிந்தன. பிரகா சிக்கின்ற பட்டணம் அழிந்தது. இக்கேடனைத்தையும் லீலையும், சரஸ்வதியும், அரசனும், அமைச்சனும் பிரத்தி யட்சமாகப் பார்த்தார்கள்.

யுத்தத்தில் வீரமுள்ள அரசனுடைய மனைவியானவள் பிரமித்து நடுக்கமுற்று வந்தாள். இவளுடன் வராநின்ற தோழியானவள் "அரசனே? அரண்மனையிலுள்ள மாதர்கள் அனைவரையும், மிகுந்த தனங்களையும் சத்துருக்கள் கொள் ளையிட்டார்கள்" என்று சொல்ல அதைக்கேட்ட விடூரத அர சன் சரஸ்வதி லீலையைப்பார்த்து "எனது பத்தினி உங்கள் அடைக்கலம்" என்று சொல்லி யுத்தத்துக்குப் போயினன்.

கண்ணுடியில் எதிரிட்ட தனது சாயையைப் போல வந்த விடூரதன் மனைவியாகிய லீலையைப் பதுமன் மனைவியான இந்த லீலையானவள் ஆச்சரியத்துடன் நோக்கி, அருமையான சரஸ்வதியைப் பார்த்து, "நூதனமாக நானே இவ்விடத்தில் வந்திருக்கின்ற உண்மை என்ன"? என்று கேட்டவுடன் சந்திர நிறத்தையுடைய சரஸ்வதியானவள் அம்மயக்கத்தை நீக்கிச் சொல்லத்தொடங்கினள்.

உனது புருடனுகிய பதுமன் உன்னிடத்திலிருக்கின்ற வாஞ்சையினல் உன்னைப்பிரியாமற் சுகித்தற்கு மரணசமயத் தில் நினைத்தான். அந்நினைவின்படியே அவ்விடத்தில் உன் னைப் பெற்றுன். துன்பமிகுந்த மரணத்தில் யாவருக்கும்

சிந்தித்தது அடையும். தன் முன்னிருந்ததன்றி கண்ணுடியில் வேறு தோற்றுமோ? மரணமும், சனனமும், மூர்ச்சையும், சாக்கிரமும், சொற்பனமும், சுழுத்தியுமாகிய இவைகளனைத் தும் குற்றம்பொருந்த ஒன்றினிடத்தில் ஒன்று இல்லாதபடி யினுல் உள்ளதென்பதும் இல்லையென்பதும் மயக்க மாத்தி ரமே அளவில்லாமல் விருத்தியாகின்றது. குற்றமற்ற அனு பவங்களானவை இரண்டு விதமாம், அவைகளைக் கேள்.

முன்னனுபவத்துக்குத் தகுந்த முறையாகச் சில உண் டாயிருக்கும்; பின்புள்ள நூதனமான பேதமாகச் சில உண் டாயிருக்கும். ஆகையால் உனது வடிவம், உனது ஆசாரம், உனது குலம், உனது நடை யென்னும்படி இந்த லீலையான வள் முன்தோற்றிய உனது நிழலைப்போலவே பேதமில்லாம லிருக்கிருள். "இராசாவின் நினைவினுல் உன்னைப் போலவே இவளுமுண்டானுள்" என்று சரஸ்வதி சொன்னுள்.

இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த நூதன லீலையா னவள் சரஸ்வதியை வணங்கி "முற்காலத்தில் நான் பூசித்த சரஸ்வதியாகிய தாயே! சத்துருவினுல் எனது புருடனிறந் தால் எவ்விடத்தில் வசிப்பரோ அந்தவிடத்தைப் பார்த்து யான் அந்தவிடத்தில் இச்சரீரத்துடன்போய் வாழும்படி தடையில்லாத வரத்தைக்கொடுப்பாய்" என்று கேட்க, 'அப் படியே கொடுத்தேன்' என்று சரஸ்வதி அநுக்கிரகித்தாள்.

இப்படிச்சொன்ன சரஸ்வதியைப்பார்த்து பழய லீலை யானவள் அம்மையே! எனது ஆதிபௌதிக சரீரத்துடன் இருந்த வேறுன ஆதிவாகிக சரீரத்தைப் பொருந்தி உயர்ந்த மனுலோகத்திலும், கிரிக்கிராமத்திலும் நான் நீங்கின வித மென்ன? அதைத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டாள்.

வேதா மாதாவானவள் "யாம் ஒருவருக்காலுைம் ஒன்றும் கொடுப்பதில்லை, நினைவின்படியேசிவர்கள் அடைவர்.

முன்னமே நினைத்து நீ ஞானத்தை யாசித்தாய், விரும்பின ஞானதிருஷ்டியைக் கொடுத்தோம். மிகுந்த ஆசையினால் இந்தப்படி இப்பெண் விரும்பினாள். இவ்வரத்தைக்கொடுத்தோம். மனதினால் கருதினது எம்முடைய கிருபா நோக்கினால் யாவருக்குங்கிடைக்கும்" என்று சொன்னாள்.

பலமுள்ள விடூரத அரசன் கோப மிகுந்தவனாய் இரதத்திலேறிச் சேனாசமுத்திரத்துடன் யுத்தகளத்திற்சென்று எமபுரிக்குச்செல்கின்ற மார்க்கமானது நெருங்கும்படி சத்துருக்கள் அனைவரையும் கெடும்படி அடித்தான். இவ்வரசன் இந்த யுத்தத்தில் மரிப்பானென்றுசிந்தித்து நாயகனிடத்தில் பிரியம் மாறாத லீலைகள் சரஸ்வதியின் பாதத்தைத்துதித்து "எமது தாயே! வீரத்தன்மை மிகுந்திருந்தும், உனது கிருபையிருந்தும் எமதரசன் இப்போரில் மரிப்பாரோ" என்று கேட்டனர்.

வேதமாதாவானவள், "கல்வியையுடைய விடூரதனானவன் பரகதியை இச்சித்ததால் இரண்டற்ற பரமபதத்தைக் கலக்கும்படி யாயினான். எதிர்த்துவந்த இச் சிந்து வரசனென்பவன் தனது வல்லமையினால் இவனைச் செயிக்க வேண்டுமென்று என்னைப் பூசித்ததினால் நியமித்தபடியே செயித்து அரசனாவான்" என்று சொன்னாள்.

இப்படியிருக்குஞ் சமயத்தில் உதய காலமாகவும், அதிரும்படி யுத்தஞ் செய்து மேல் நெருங்கிய வெம்மையாகிய யுத்த களத்தில் இரண்டிடத்திலும் சேனையொன்றுமில்லாமல் இறந்தது. சிந்து வென்னும் அரசனும், விடூரதன் என்னும் அரசனும் வில்லை எடுத்தார்கள். சூரியனும், சந்திரனும், திக்குகளும் ஆகாயமும் விடப்பட்ட அம்புகளினால் மறைய எவ்விடத்தும் நிறைத்தார்கள். முன்னெதிர்க்கின்ற வெப்பமான பாணங்களின் கூட்டங்கள் எரிந்து அக்கினிச் சுவாலை வியா

பித்து யுகமுடிவைப் போலிருக்குமளவில் தேரை நடத்தா நின்ற சாரதியும், இரதமும், தனுசும், அறுபட்டு மேன்மையான விடூரத அரசன் தனியனானான்.

அர்த்த சந்திர பாணத்தினால் வச்சிர கவசம் சிதறி விழும்படி பிளந்து தேகத்தின் அவயவங்கள் யாவும் பிளக்கப்பட்டுச் சின்னாபின்னமாய்ச் சிதறுமளவில் வலிமை நீங்கிப் பூமியிற் சாய்ந்த விடூரதனைப் பார்த்துக்கொண்டு சரஸ்வதியை நூதன லீலையானவள் பார்த்து "என்னாயகன் பிராணன் பிரியுஞ் சமயத்தை அடைந்திருக்கிறார். இவருடன் யானும் பொருந்தக்கிருபை செய்" என்று கேட்டாள். அத்தாயாகிய சரஸ்வதி அங்ஙனமே அனுக்கிரகித்தாள். அந்த நூதன லீலையும் ஆகாயத்தில் இலேசாகிப்போனாள்.

மேக மண்டலத்தைக் கடந்து, வாயுமண்டலத்தைக் கடந்து, வெம்மையான சூரிய மண்டலத்தைக் கடந்து, சமீபமான நக்ஷத்திர மண்டலத்தைக் கடந்து, மேல் சத்தியலோக முதலிய தேவலோகங்களைக் கடந்து, பொருந்தாநின்ற இவ்வண்டத்தைக் கிழித்துக்கொண்டுபோய்ச் சலமுதலான ஏழாபரணத்தையும் ஊடுருவி அளவும் அந்தமும் இல்லாததான தத்துவ சிதாகாயத்தைச் சீக்கிரத்தில் அடைந்தாள்.

அளவில்லாத காலம் வேகமாகக் கருடன் பறந்தாலும் கடக்கக் கூடாததாயும் அத்திவனம் காய்த்திருக்கின்றன போல உதித்தன வாகிய அளவற்ற பிரமாண்டங்கள் ஒன்றையொன்று பார்க்கக் கூடாததாயுமிருக்கின்ற அவ்வண்டங்களுக்குள் பெரிதாக ஆவரணபேதமானது அருகில் வளைந்துகொண்டிருக்கின்ற ஓரண்டத்தினுள் ஞானாகாயத்தைக் கடந்துபோய்ப் பதும அரசனது பிரேதமிருந்த அந்தப்புரத்தைச் சேர்ந்தாள்.

"பெருங்கானஞ் செய்யும் வண்டுகள் நிறைந்த புட்பங்களினால் மறைக்கப்பட்ட இப்பிரேத தேகமாகிய பூபாலனே நம்முடைய கணவன். கிருபையுள்ள சரஸ்வதியினால் எப்படியோ முன்னமே இவ்விடம் வந்தோ" மென்று நன்ருய்ச் சிந்தித்து வெண்சாமரம் வீசிக்கொண்டு அவ்விடத்தில் தனது நாயகனுடைய ஒரு பக்கத்தில் அப்புதியலீலை இருந்த பின்பு, நின்மல ஞானியான மகானுன விடூரத அரசன் பொருந்திய சீவனனது அகாயத்திற் சென்றது.

ஞானதிருஷ்டியை யுடைய லீலை சரஸ்வதி யென்னும் இருவர் அவ்விடூரத சீவனைப் பார்த்து, ஆகாயத்திற் சென்று பின் வருகின்ற சிறந்த மாதர்களைத் தானறியாமல் நீங்கின சீவனனது நகரத்திற் சென்று பதுமப் பிரேதமிருந்த அந்தப் புரத்தையடைய உடன் சென்ற இவ்விரண்டு ஸ்திரீகளும் புதிதான லீலையை விரும்பிப்பார்த்தார்கள். சுவர்ணத்தினால் செய்த மண்டபத்தில் பொருந்திய சீவனை பதுமாசனத்தையுடைய சரஸ்வதியானவள் மறுத்துத் திரும்பவும் மேற் செல்லாமல் தடுத்தாள்.

பழய லீலையானவள் தனது ஆதி பௌதிக சரீரத்தைக் காணுமல் சரஸ்வதியை வணங்கிக்கேட்கவும் "கற்பனை மிகுந்த மனம் நாசமாய்ப் பூரண நிஷ்டையினால் மறித்துக் கீழே விழுந்த சரீரத்தை இறந்ததாமென்று எண்ணிக்கொண்டு மந்திரிகள் கொடிய அக்கினியினால் தகனம் பண்ணினார்கள். இவ்வாதிவாகிக சரீரத்துடன் நீ இப்பூமியின்கண்ணிருந்தால் தேவலோகத்திலிருந்து முன் மரித்த லீலையானவள் சரீரத்துடன் வந்தாளென்று யாவரும் வியப்பார்கள். ஆகையால் ஆதிவாகிகச் சரீரத்துடனிருந்து வாசனையை நீக்கினபடியால் ஆதி பௌதிக சரீரத்தை நீதள்ளத்தக்கு" தென்று இந்த

லீலைக்குச் சொல்லி, அந்தப் புதிய லீலையானவள் இப்போது நம்மைப்பார்க்கக் கடவளென்று சரஸ்வதியானவள் மனதில் சங்கற்பித்தாள்.

உடனே தெரியாதிருந்தவர்கள் பிரத்திக்ஷமானவளவில் தான் பெற்ற செல்வங்களைப்போல தெரிசித்த லீலையானவள் அத்தேவிகளின் பாதங்களை வணங்கித்தோத்திரஞ்செய்தாள்.

ஞானஸ்வரூபியாகிய சரஸ்வதியும் பழய லீலையும், புதிய லீலையும் கூடியிருந்த இடத்தில் மிருதுவாகிய சாதி புட்பமரமானது வாசனையை விட்டதுபோல சரஸ்வதியான வள் சீவன் தடையை விட்டுவிடவும் பிராண ரூபமாய் மூக்கி னுட்சென்று உலர்ந்த சரீரம்யாவும் பரந்து வியாபிக்கக் குளிர்ச்சியாகி இரத்தமுண்டாய்க் கண்விழித்து மரித்த அர சன் எழுந்தான்.

இவ்விடத்திலிருக்கிறவர்கள் யார் என்று பேரிடியின் சப்தத்துக்கொப்பாக இப் பதும வரசன் கேட்டான். அங் கிருந்த லீலையானவள் அரசனை நமஸ்கரித்து 'யான் இத்தே கத்துக்குத் தகுந்த மனைவி' என்றாள். 'உன் பக்கத்தில் வணங் கின இப்பெண் யார்' என்று கேட்க 'என் வடிவத்தைப்போல நீர் மனதில் நினைத்ததினால் நீர் சுகிக்க வந்தவள். இவ்விடத் தில் இருப்பவள் பரிசுத்தமாகிய சரஸ்வதி' என்று பழய லீலையானவள் தெரியச் சொன்னாள்.

இப்படி லீலைசொன்ன மாத்திரத்தில் பாதத்தில் வணங் கிய இப்பதும அரசனை சரஸ்வதியானவள் தனது பிரகாசம் பொருந்திய அழகிய அஸ்தத்தினால் சிரசைத் தொட்டு "நீ பாரியர்களோடும் சிறப்புடன் வாழவும் நல்ல கீர்த் தியும் மேலான சம்பத்தும் வளரவும் சகத்திலுள்ள சனங் கள் விளங்கவும் தீமைகள் அனைத்தும் நீங்கவும் எவ்விடத்தும்

பிரகாசிக்கின்ற மகான்கள் நிறைந்திருக்கவும் நீ சுகித்திருப்பாய்" என்று அருள் செய்து நின்மலமான சரஸ்வதி தனதிடத்திற்கு எழுந்தருளினாள்.

"சரஸ்வதி வாழ்க; நாமகள் வாழ்க; கலைமகள் வாழக் கடவ" தென்று இனிமையாகத் தோத்திரஞ்செய்து, சக்ர வர்த்தி யான பதுமவரசனும், பாரியர்களும் எண்பதினாயிரம் வருடம் பூபாலனம் செய்து, பின்பு எழுவகையாகிய பெரிய சனனங்களைக் கெடுத்து சரஸ்வதியானவள் முன்னனுக் கிரகஞ்செய்த சீவன் முத்திப்பதத்துடன் பூமியிலிருந்து பின்பு மகாகற்பம் இறந்தாலும் அற்பமாகிலும் கெடாத விதேக முத்தியான மோக்ஷத்தை அடைந்தார்கள்" என்று ஸ்ரீராமருக்கு வசிட்டமுனி சொன்னார்.

(கருத்து) சுத்த வாசனையோடும் சீவன் முத்தர்களாயிருந்து பின்வாசனுக்ஷயமான விதேகமுத்தியைப் பெற்றதாம்.

லீலை கதை முற்றிற்று.

உ

புசுண்டர் கதை.

ஸ்ரீராமபிரான் வசிட்டமாமுனியைப் பார்த்து, "மெய்ஞ் ஞான லீலையினுலாவது, பிராணபந்தனத்தினுலாவது விளங் காநின்ற அசுத்த வாசனையைவிட்டுத்துன்பம் நீங்கி, மேலான சீவன் முத்தர்கள் இருந்ததைச் சொல்லியருளவேண்டும்" என்று கேட்டார்.

வேதத்தையுடைய வசிட்டமுனியானவர் இவைகளைச் சொல்லத்தொடங்கினுர்.

"பிறவித் துன்பத்தைக் கெடுக்க யோகநாமம் உடைய தாகி யுத்தியானது இரண்டுவிதமாகும்.

மெய்ஞ்ஞானம் ஒன்று, பிராணபந்தனமொன்று, இந்த இரண்டும் யோகநாமத்தைப் பொருந்தும். என்றாலும், பிராணபந்தனத்துக்கு யோகநாமமானது மிகவுமுரியதாம். இவ்விரண்டும் பரமேஸ்வரன் சொல்லியது.

ஒருவனுக்கு யோகமானது அரியதாகும். ஒருவனுக்கு மெய்ஞ்ஞானம் அரியதாகும். ஆக இந்த இரண்டில் மெய்ஞ் ஞானம் முன்னமே சொன்னேன். இனிமேல் யோகத்தின் கிரமத்தைச்சொல்லுவேன். தேவாமிர்தத்தை யொத்த ஒரு சரித்திரத்தைச் சொல்லுவேன் கேட்பாய்.

"நான் ஒருகாலத்தில் தேவேந்திரனது சபையில் தேவ ரிஷிகளுடன் இருந்தேன். நாரதர் முதலிய முனிவர்களால் சிரஞ்சீவிகளின் கதைகளைக் கேட்டேன். சிறப்பையுடைய மகாமேருவின் ஈசான திசையில் பதுமராக ப்ரகாச முண்

டாகிற கொடுமுடியிலிருக்கின்ற கற்பக விருக்ஷத்தினது தென்புறக் கொம்பில் கட்டிய பெரிய கூண்டினிடத்தில் புறம்பில் ஒரு மலை யிருந்ததுபோல புசுண்டனென்னும் பெயரையுடைய ஒரு காகமானது வசிக்கும்.

பிரமாவுக்கொப்பாக இருந்த புசுண்ட யோகியைப் போல அநேக காலம் எவர்கள் யோகத்தில் இருந்தார்கள்? பழமையான சொர்க்கலோகத்திலும் முன்னும் பின்னும் இல்லையாம். அப்புசுண்டமே தீர்க்காயுசையுடையது. ஆசையில்லாதது. மோக்ஷ செல்வமுடையது. பெரிதான அறிவையுடையது. விஸ்ராந்தியுடையது. துன்பமற்ற மனதினால் மூன்று காலத்தையும் வரையறுத்து அறியும்'' என்று தேவசபையில் யாவரும் கேட்கும்படியாக இரண்டு தரமாய் அப்போது புசுண்டயோகியின் குணத்தை மெய்யாகச் சாதாதபமுனி சொன்ன பிரகாரம் நான் கேட்டுப் போய்ப்பார்ப்போமென்று இச்சித்து அங்குசென்று மகம்மேருவின் முடியில் வாசனை பரிமளிக்கின்ற கற்பக விருக்ஷத்தில் வேறொரு கற்பக விருக்ஷம்போல இருக்கப்பார்த்தேன்.

அவ்விடத்தில் மலைச்சார்புகள்தோறும் குகைகள்தோறும், அளவற்ற புட்பங்களாகிய கொடிகள்தோறும், கிளைகள் தோறும் பெரும் பக்ஷிகள் வசித்திருக்கும். சந்திர நிறத்தையுடையனவாயிருக்கின்ற பிரமதேவனுடைய வாகனமாகிய அன்னக்கூட்டங்களினுடைய குஞ்சுகள் உயர்வான சாமவேத கானங்களையும் மந்திரங்களையும் சுவாகாகாரத்தோடும் உச்சரிக்கின்றன.

குயில்களும் கிளிகளும் இன்னும் வெகுபக்ஷிகளும் சுப்பிரமணியர் போதித்ததாகிய சிவஞானத்தைப் பயிற்சி செய்கின்ற மயில்களுமாகிய அநேக வினங்களைப் பார்த்தேன்.

பெரிய சரீரத்தையுடைய காகக் கூட்டங்களுள் மலை யைப்போல் உயர்ந்த வடிவமும் மிகவும் பூரணமும், மௌன மும் நிறைந்து பிராணசலனமுண்டாகாமல் அகமுக நீங் காத சுகமுள்ளதாயிருந்த அப்புசுண்டன் முன்பு யான் சென்றேன்.

பரவசராய் அப்புசுண்டயோகி என்னெதிரே வந்து வசிட்டனென்றறிந்து, 'சீக்கிரமாகச் சிறப்பாகவந்த நல்ல வரவையுடைய முனீஸ்வரரே'! யென்று இனிமை கூறித் தரா நின்ற சங்கற்பத்தினாலுண்டான விசாலம் பொருந்திய கரங் களினால் புட்பத்தை அருச்சித்து இருப்பாயென்று ஆசனத் தைக்கொடுத்து இருந்த பின்பு இன்பத்தோடும் அருக்கிய முதலான சகலத்தையும் கொடுத்து அன்பாயிருக்கின்ற மதுரவசனங்களை மிகவுஞ் சொல்லி "மகானே! உமது தரி சனமென்னும் அமுதப் பெருமழையால் எனது கூட்டத் தோடும் யான் மனமகிழ்ந்தேன். நீர் வழியில் நடந்துவந்து சரீரம் வருத்தப்பட்டீர். தேவரீர் பாத தரிசனத்தினால் அனைத்தும் அறிந்தேன். சிரஞ்சீவியாயிருக்கின்ற மாசற்ற பெரியோர்களோடும் என்னையுஞ் சிந்தித்தீர். அதைப்போல நீர் வந்ததையுந் தெரிந்தேனென்றாலும், உமது வசனாமிர் தத்தைப் புசிக்க விரும்பினேன்" என்று புசுண்டயோகி சொன்னார்.

அந்த வசனத்தை நான் கேட்டு, பரிசுத்தமான நல்ல மனதையுடைய புசுண்டயோகியைப் பார்த்து, ஐந்து சங் கைகளைக் கேட்டேன். அதென்னவென்றால்.

"பக்ஷிகளுக்கிறையே? நீர் சொன்ன பிரகாரமே மெய். வெகுகாலமாய் மரணமில்லாத உம்மைக்காணும் பொருட்டு வந்தேன்.

1. நீர் எந்தக் குலத்தில் சனனமானீர்?
2. எப்படி தத்துவ ஞானத்தை அடைந்தீர்?
3. பெருமை பொருந்திய உமது ஆயுள் எவ்வளவாயிற்று?
4. இந்தச் சகத்தின் நீதியில் நீர் அறிந்திருக்கின்ற தன்மையென்ன?
5. சர்வஞ்ஞத்துவமுள்ள யாவனால் நீர் இந்த இடத்தில் சேர்ந்திருக்கின்றீர்?

கிரமமாகக் கொள்ளும்படி யெல்லாவற்றையும் சொல்லும் என்று கேட்க ஒழுக்கமிகுந்த புசுண்டர் சொல்லுவார்.

யாவருக்கும் மேலான சிவத்தின் அழகான சந்நிதியில் ஆனை முகத்தையும், ஆட்டு முகத்தையும், ஒட்டை முகத்தையும், கரடி முகத்தையும், பூமிக்கொப்பான மற்ற முகங்களையும் பெற்றிருக்கின்ற சிவகணங்கள் அநேகம் உண்டு.

சிரசில் குளம்புள்ளவர்களும் குளம்புள்ள நீண்ட கரங்களை யுடையவர்களும், வயிற்றில் முகத்தை யுடையவர்களுமாகிய அளவில்லாதவர்களான அநேக கூட்டங்களோடும் சூழ்ந்திருப்பார்கள். அப்பூத கணங்களைப்போல கைலாசகிரியில் சிவன்முன்பு பூத கணங்களினால் வணங்கப்பெற்றவர்களாய் மலையினுச்சியும், ஆகாயமும், பூமியும், கானகங்களும், சுடுகாடும், உடலும், இடமாக இருக்கின்ற சத்திக் கூட்டங்களானவர் நிருத்தஞ் செய்வர்.

அவர் தாரதம்மியத்தில் உயர்ந்திருக்கின்ற சயையென்றும், விசையை யென்றும், சயந்தி யென்றும், அபராசிதை யென்றும், சித்தை யென்றும், இரத்தை யென்றும், அலம்புசை யென்றும், உற்பலை யென்றும் எட்டு மகாசத்திகளா

வர். முன்னம்பொருந்திய தலைவிகளாகிய அந்த அஷ்டசத்தி களுக்குள் சொல்லிய அலம்புசை யென்னும் சத்திக்கு திடமாக வராநின்ற வாகனமாகவுடைய சண்டனென்கின்ற நாமத்தையுடைய ஒருகாகம் உண்டு.

அணிமாதி குணங்களையுடைய அஷ்ட ஐஸ்வரியத்தையும் பெற்ற அச்சத்திகள் அனைவரும் இஷ்டமாகிய சிவன் ஆக்ஞாபிக்க அனைவரும் சேர்ந்து ஆகாசத்தினிடத்தில் குறைவில்லாத திருவிழாவை ஆரம்பித்து மதுக்களைக் குடித்து நடனஞ் செய்தார்கள். பாடினார்கள். மதர்த்தார்கள். வெளிப்படச் சிரித்தார்கள்.

அத்திருவிழாவானது நடக்குங்காலத்தில் அவர்களுடைய வாகனங்கள்யாவும் இக்கிரமப்படி மதுக்களையுண்டு மதர்த்து அவர்கள் ஆகாயத்தின் ஓர் பக்கத்தில் பிரமசத்தியின் வாகனங்களான அழகுள்ள பெண் அன்னங்கள் சண்டனென்கிற காகத்தோடும் சேர்ந்து விளையாடி மதர்த்து அந்த அழகிய காக்கையைக்கூடி நீண்ட கருப்பத்தையடைந்து மிகவும் மனங்களிக்கின்ற அந்தக்காலத்தில் தேடிமுயற்சித்த திருவிழாவை முடித்துக்கொண்டு பரமேஸ்வரனுடைய சத்திகளும் அவர்கள் கணங்களும் பாடலும் ஆடலும் நீங்கி மனமகிழ்ச்சியுடன் தங்கள் தங்கள் இடத்துக்குப்போனார்கள்.

அப்படிப்பட்ட காலத்தில் கருப்பமடைந்த பிரமசத்தியின் அன்னங்கள் கருப்பமுண்டான விதத்தை சங்கற்பமற்ற தங்கள் எஜமானிக்கு உண்மையாகச்சொல்ல "ஊழின்படி கருப்பமடைந்தீர்கள். எனது ரதத்தை இழுக்கின்ற சத்தியற்றீர்கள். உங்கள் நினைப்பின் வண்ணம் சென்று வசியுங்கள்" என்றுநிறைந்த கருணையினாற் சொல்லி, நிருவிகற்ப சமாதியில் தேவியானவள் இருந்தாள். அன்னங்கள் கருப்ப

முதிர்ச்சியாய் மானதத்தடாகக் கரையில் கால நியமப்படி முட்டையிட்டுக் குஞ்சாக வரா நின்ற சண்டனென்கிற காகத்தின் புத்திரர்களாகிய நான் உள்பட அந்த இருபத்தொரு பேர்களும் பெறு நின்ற அன்னைகளோடும் பிரமசத்தியை வெகுகாலம் பூசித்தோம்.

பிரமசத்தியானவள் சமாதியிலிருந்தும் எழுந்திருந்து, அன்பினுல் தானே அனுக்கிரகஞ்செய்ய வாட்டமில்லாமல் மோக்ஷத்தையடைந்தோம். உபசாந்தத்தினுல் அகமகிழ்ச்சியடைந்தோம். சங்கமில்லாது ஏகாந்தமாக வசிக்கும் ஸ்தானம் எதுவென்று கேட்கும்பொருட்டு குணமுள்ள தந்தையை அலம்புதையின் பக்கத்திற்போய் இருவரையும் சேர்ந்து வணங்கிப் பிரமியென்கிற சத்தியினது கிருபையினுல் மோக்ஷத்தை அடைந்தோம். தனித்த நிருவாண சுகத்தில் இருக்கின்ற ஸ்தானத்தைச் சொல்லுவா யென்று நாங்கள் கேட்க (தேவி அனுக்கிரகப்படி) பிதாவானவர் 'கலந்த துன்பங்களனைத்தும் பொருந்தாத ஸ்தானம் இந்நல்ல கற்பக விருக்ஷம்' என்று அனுக்கிரகித்தாள். அங்கு அவர்களைவணங்கி துன்பமறும்படி வந்து இவ்விடத்தில் வசித்தோம்.

அன்று முதலாக யான் செய்த தருமங்களனைத்தும் உமது ஸ்வரூபமாய் இப்போது இலாபமாயிற்று. மேலான ஞானவான்கள் சங்கமென்கின்ற நிறைந்த நிலவானது, பரிமளமுள்ள அமுதமயமாகத் தவிராத பிரமசுகத்தை யாருக்குத்தான் கொடாது? இது நல்லது என்கின்ற ஆத்மாவுக்கு உறுதியானது சத்துக்கள் அனுக்கிரகத்தைவிட வேறேயுண்டோ?

பிரமத்தையறிந்தேனென்றுலும் உமது கடாக்ஷத்தினுல் எனது பவங்களனைத்தும் சீக்கிரமாகக்கெடுத்தபடியால் இச்

சநநமே மிகுந்த பிரயோஜனத்தையுடையது. ஈஸ்வரா'' வென்று என்னைத்திரும்பவும் ஆராதனை செய்தார். பின்பு அந்தப் புசுண்டரை நோக்கித் 'திடமான உமது சகோதரர்கள் நீங்கின பிரகாரம் என்ன சொல்லும்' என்று கேட்டேன்.

"இவ்விடத்து யாவரும் அநேக யுகங்களும் அநேக கற்பங்களும் ஒத்து வசித்தோம். தொந்தமாயிருக்கின்ற எனது தம்பிகள் தேகங்கள் துரும்பெனத்துறந்து மேலாகிய பிரம பதத்தை அறிந்தவர்களாய் மோக்ஷத்தை அடைந்தார்கள். மிகுந்த ஆயுளையும், தகுந்த மகிமையையும், வல்லமையையும் பெற்றிருந்தும் தங்கள் சங்கற்பத்தினால் தாங்களே மரித்தார்கள்'' என்று புசுண்டர் சொன்னவுடன் "கற்ப முடிவும் அலை வீசா நின்ற பிரளய வெள்ளமும் பிரசண்ட வாயுவும் உண்டாகுங் காலத்தும், நெருங்கிய துவாத சாதித்தாள் சகத்தை எரிக்கும்போதும் எப்படி இறவாம லிருந்தீர்'' என்று கேட்க இவைகளிற் கெடாதிருந்த புசுண்டர் "நீண்ட சகத்தின் தொழிலானது எந்தக்காலத்தில் அழியுமோ அந்தக்காலத்தில் யானும் இந்தக்கூட்டை விடுவேன். துவாத சாதித்தாள், அனைத்தையும் எரிக்கும்போது, சலதாரணையினால் ஆகாயத்தை அடைவேன். மலைகள் சிதறும்படி காற்று அடிக்குங்கால் பருபததாரணையினால் அசையாமல் ஆகாயத்தை அடைவேன். பழமையான சகமும் மகமேருவுடன் சமுத்திரம் மூடிக்கொண்டால் வாயுதாரணை யினால் சலன மின்றி மிதப்பேன்.

சர்வசங்காரகாலம் வந்ததானால் பிரமாண்டத்தின் முடிவை அடைந்து, துன்பமில்லாத தத்துவ முடிவென்கின்ற குற்றமற்ற பிரமபதத்தில் சுழுத்தியென்கின்ற அவத்தையினால் திரும்பப் பிரமதேவன் சிருட்டிக்குமட்டும் இருப்

பேன். பிரமதேவன் பிரமாண்டத்தைச் சிருட்டிக்கில் பட்சியினது பெரிதான இக்கூண்டிற் சேர்வேன்.

என்னுடைய சங்கற்பத்தினால் இந்த மலையினது இக்கொடுமுடியில் பருத்த கற்பக விருக்ஷம் கற்ப கற்பங்கடோறும் இந்தப்பிரகாரமே உண்டாயிருக்கும்" என்று சொன்னார்.

"மாசில்லாதவரே? தாரணைகளினால் அநேக கற்பம் நீர் கெடாமலிருந்தீர். வினவாநின்ற மற்றயோகிகள் யாவரும் இறந்ததேனோ சொல்வீர்" என்று கேட்டேன்.

இப்படியான புசுண்டயோகி அதற்குச்சொல்லுவர். "அழிவற்றபரமே! சுரனியதியான பொருந்திய இதை யார் அதிக்கிரமிப்பார்கள்? எனக்கு இந்தப்பிரகாரம். அவர்களுக்கு அந்தப்பிரகாரமாம்.

பொருந்த வருகின்றது நீக்கக்கூடாததால் மிகவும் எது எது எப்படியாகின்றதோ அது அது அவ்விடத்தில் அந்தப்பிரகாரம் ஆகுமென்று நீர் கருதும். இதுவே நியதி நிச்சயமாம்" என்று சொல்லிய புசுண்டயோகியைப் பார்த்து, "பிரமஞானத்தையும், சாஸ்திர ஞானத்தையும் அடைந்த நீர், பூரணயோகத்தைத் தொடர்ந்த மனதினால் பழமையான திரிபுவனத்தினது உம்முடைய மனதில் என்ன என்ன அதிசயங்கள் எதிரிட்டதோ அவைகளனைத்தையும் ஒன்றுந் தவிராமல் சொல்லும்" என்று கேட்டேன்.

மேலான புசுண்டயோகி "இந்தப்பூமிகளில் நிறைந்து கிரியுந்தருவும் புல்லும் வெகுகாலம் தோன்றாதிருந்தது. சொல்லால் நிறைந்த பதினோராயிரம் வருடம் பஸ்பத்தினால் நிறைந்தது. நன்மையையுடைய வசிட்டரிஷியே வேறே சதுர்யுகமும் பொருந்திய காடுகளும் நிறைந்திருந்தது. அப்படியிருந்ததுமன்றி நாலுயுகம் இடமில்லா

மல் மலைக்கூட்டங்களும் நிறைந்திருந்தது. இப்பூமியானது நான்குயுகம் அகஸ்தியரில்லாமல் பரந்த விந்தகிரியினால் மறைபட்டது.

உண்டாகிய ஒரு சிருஷ்டியில் கள்ளைப் பிராமணர்கள் இச்சிக்க, சூத்திரர்கள் அந்த மதுவை நிந்தித்தார்கள். கற்புள்ள ஸ்திரீகள் விரும்பினபடியே நடந்தார்கள். மேலாகிய வசிட்ட முனிவரே இவைகளைப் பார்த்தேன். வேறே கண்டவைகளுமுண்டு, சொல்லுகிறேன்.

சந்திரசூரியர் முதலானவர்களுற்பத்தியும், இந்திரோபேந்திரர்கள் நிலையும், இரணியாக்ஷதனால் திருடிக்கொண்டுபோன பூமியை விஷ்ணுவானவர் வராக அவதாரமாய்ப் பிடிங்கிவந்ததும், நுட்பமாகச்சொல்லுகின்ற கற்பங்கடோறும் விரும்பிச்சிதறிப்போன வேதங்களைச்சேர்த்து வைத்ததும், சப்திக்காநின்ற பாற்சமுத்திரத்தில் மந்தரகிரியினால் அமுதங்கடைந்தெடுத்ததும் யான் அறிவேன்.

மகத்துவத்தினையுடைய சகத்திலுள்ள இவைகளனைத்தையும் எனக்கு இளையவர்களாயினும் அவர்கள் அறிவார்கள். உலகத்தில் அவதாரமானவர்கள் உம்மையாதியானவர்கள், தவத்தையுடைய நாரதரும், பரத்துவாசரும், மேலான மரீசியும், புலத்தியரும், அத்திரியும், தேவேந்திரனும், சனக்குமாரரும், மதஞ்சொரியும் யானைமுகத்தையுடைய விநாயகரும், சுப்பிரமணியரும், பிரிங்கியும் முதலான சொல்ல முடியாதவர்கள்.

அந்தப்படி இதுகாலவரையும் சிருட்டிகளினிடத்தில் பிறவிசேர்ந்தவர்களில் ஓரள வுண்டாமோ? சத்திய வசனத்தையுடைய வசிட்டமுனிவரே! உமது பிறப்பைச் சொல்லுமிடத்து இஃது எட்டாவதாம். இந்த வண்ணம் அந்த

எட்டாஞ் சனனத்தில் இவ்விடத்தில் நாமிரண்டு பேரும் சந்தித்தோம். எக்காலத்தும் உயிர் வாழ்வாக அன்று வந்தது போல இப்போதும் என்னிடத்தில் வந்தீர்.

நீர் ஒருதரம் ஆகாயத்திலிருந்து பிறந்தீர், ஒரு தரம் சலத்திலிருந்து பிறந்தீர், ஒருதரம் வாசமுள்ள சோலை சூழ்ந்த மலையிலிருந்தும், ஒருதரம் சிவந்த அக்கினியிலிருந்தும் உண்டானீர்.

ஐந்து சிருஷ்டியில் இந்தப் பூமி மறைந்து போனதும், திரும்பக் கூர்மாவதாரத்தினால் எடுத்தும் கிருபையினால் பால் சமுத்திரத்தில் அமுதமெடுக்கத் தேவர்கள் பன்னி ரண்டுதரம் கடைந்தார்கள். இவைகளையுமறிவேன்.

மூன்றுதரம் இரண்ணியாக்ஷன் பாதாளத்தில் பலம் பொருந்திய பெரிய பூமியை எடுத்துக்கொண்டுபோனான். மேகவண்ணத்தையொத்த விஷ்ணுவானவர் இரேணுகையி னிடத்தில் ஆறுதரம் பரசுராமனாகப் பிறந்தார். மேலாகிய விஷ்ணு திரும்பவும் நூறுகலியுகத்தில் புத்தாவதாரஞ்செய் தார். திரிபுராதிகள் ஒரு தரத்தைப்போல முப்பதுதரம் தகனமானார்கள்.

தக்ஷப்பிரசாபதியானவன் இரண்டுதரம் யாகத்தை இழந்தான், சந்திரமௌலியினால் விளங்காநின்ற சக்கரத் துக்குப்பொருந்திய அபசெயம் பத்துத்தரமானது. ஈஸ்வரனு டன் பார்த்தனுக்கு மிகுந்த பன்றியினிமித்தம் உண்டான கொடிய யுத்தம் எட்டுத்தரமானது. தொகுப்பான யுகங்கள் தோறும் அநாதியாகிய வேதம் புருடர்களுடைய புத்திக்கீ டாக உண்டாயிருக்கிறது.

அறிவின் மார்க்கமாய் வேதம் ஏற்றக்குறைச்சலானது. உலகத்தின்தொழிலும்அப்படியே அதிசயங்களானது. இதைப்

போலவேபுராணக்கூட்டங்களும்பாடம்பலவிதமாகிஅருத்தம் ஒன்ருகும். யுகங்கள்தோறும் அமலராமாயணமென்ற நாமமுடையதாய் மிகுந்த அதிசயத்திஞல் இலட்சம் கிரந்தத்திஞல் ஞானசாஸ்திரமானது சொல்லப்படும்.

ஞானராமாயணமாகிய இதை நல்ல வான்மீகி ரிஷியானவர் சொல்லியதுபோல பின்புண்டான வான்மீகரும் அநேகந்தரம் இதுஅழிந்ததிஞல் பன்னிரண்டுதரம் உண்டாக்கிஞர். குறைவில்லாத இதற்கொப்பாக இரண்டாம் இதிகாசமான பாரதமாகிய இதை முதல் மாட்சிமையான வியாசமுனி செய்ததும் அது கிலமாக, மற்றுள்ளவர்களுஞ் சொன்ஞர்கள்

இராக்ஷதர்கள் கெடும்படியாக பதிஞேராம் அவதாரத்தில் ஸ்ரீராமனென்று இரக்ஷிக்கின்ற விஷ்ணுவானவர் இந்தச் சிருஷ்டிகாலத்தில் பூமியிலுண்டானவர். வாசுதேவனுடைய விசாலமுள்ள வீட்டினிடத்தில் பதிஞுருவதுதரம் இந்தச் சிருஷ்டிகாலத்தில் விஷ்ணுவானவர் உண்டாகுவர். சொல்லாநின்ற இந்தச்சகப் பிரமையானது ஒருதரம் தோன்ருததாகவும், ஒருதரம் தோன்றுவதாகவும் வரும்.

உண்டாகிய திரிஸ்யமென்கின்ற இப்பிரமையானது கெடாமல் எப்போதும் ஞாஞத்மாவினுள் நிலேயாகவிருந்து சலத்திற்பொருந்திய திரைகளைப்போல உண்டாகி நாசத்தையடையும், சொல்லப்பட்ட எட்டுத்திக்குகளும், மலேகளும், சூரியனும். சந்திரனும், நக்ஷத்திரங்களும், மகாமேருவினிடங்களும் சிருஷ்டிகடோறும் வேறுவேறு தன்மையாம். மேலான வசிட்டமுனிவரே இவைகளேயும் பார்த்தேன்.'' என்று சொன்ஞர்.

(கருத்து.) **மாயா விசித்திரமே சகமுதலிய யாவுமாம் என்பதைத் தரிசிப்பித்து அதை நீக்கு நிமித்தம் சகத்தின் விசித்திரங்களே விஞவினதை அறிவித்ததாம்.**

"நான்கு யுகங்களும் ஒருயுகத்துக்கொருயுகம் ஒழுக்கங் களோடும் மாறுபட்டிருக்கும். யாகஞ் செய்கின்ற வசிட்ட முனிவரே" என்று சொல்லிய புசுண்டயோகியைத் திரும்பவும் ஒன்றை யான் சங்கித்துக்கேட்டேன்.

"தொழிலோடும், இந்தப் பூமியிற் சஞ்சரித்தும், நீர் யமனை நீங்கின தெப்படி" யென்று கேட்கத் திரும்பவும் அதற்குப் புசுண்டயோகியானவர் சொல்லுவார்.

"நிறைந்த மகான்களிட்ட கட்டளைவழி செல்லத் தெரி யாதவர்களுக்குப் பொருந்தாநின்ற பிரயோசனம் யாது? உமக்குத்தெரிந்திருந்தும் இவ்விடத்தில் அடியேனைக் கேட்ட படியால் சொல்லுவேன் கேட்பீர்.

வாசனை யென்னும் சூத்திரத்தில் கோக்கும் நிறைந்த குற்றங்களாகிய நீண்ட பாசிமணி வடங்களை சாராமலிருக் கின்ற மனதையுடையவர்களைக் கூற்றுவன் நெருங்கான்.

நிச்சயமாகிய விருக்ஷத்துக்குப் பிளக்கின்ற அரிவாளா யும், சரீரமென்னும் கொடிக்கு எரிபுழுவாயுமிருக்கின்ற, சுழலாநின்ற மனதினது துயரத்தை அடையாதவர்களை எமன் அணுகான்.

நசியா நின்ற சரீரமென்னும் விருக்ஷத்தைச் சுற்றிக் கொண்டிரங்காநின்ற மனதினிடத்தில்தலைவைத்துக்கொண்டு சீறு நின்ற இச்சை யென்னும் சர்ப்பமானது நெருங்காத முதன்மையான சத்துக்களைக் கூற்றுவன் நெருங்கான்.

இராகத் துவேடமென்கின்ற நஞ்சானது பெருக மன மென்கின்ற புற்றில் லோபமென்கின்ற சர்ப்பமானது வந்து நெருங்கிப்புசியாத ஞானவான்களைக் கூற்றுவன் நெருங்கான்.

மிகுந்த விவேகமென்னும் சலம்வற்றி தேகமாகிய சமுத்திரத்தில் வடவாமுகாக்கினியாய்ப் பரவாமல் கோப வேரைக் கெடுத்த குணத்தார்களைக் கூற்றுவன் நெருங்கான்.

உறுதியாகிய செக்கில் சேர்ந்த எள்ளு நசிப்பதுபோல கொடிதான மன்மதனால் அழிவுபடாத அறிவையுடையவர்களைக் கூற்றுவன் நெருங்கான்.

சொல்லப்பட்ட இத்தோடங்கள் சுழலாநின்ற பவத்துக்கு வித்துக்களாம். வேற்றுமையில்லாமல் ஏகமாகிய மகாமனதைத் துன்பஞ் செய்யாது. ஆதிவியாதிகளிலுண்டாகி நீங்காத பிரமையினால் சஞ்சலிக்கின்ற துன்பமானது வேற்றுமைகெடத் தீமையில்லாத ஏகமாகிய மனதின் பக்கத்திலும் இத்தோடங்கள் செல்லமாட்டாது.

இருதயாகாயத்தை இருளாகச்செய்து இராகத்துவேடத்தில் உண்டான சிந்தையானது கெடாத வேற்றுமை கெட ஏகமாகிய மனதின் பக்கத்திலும் நெருங்கமாட்டாது.

நெருங்கிய தீமையான வஸ்துக்களும், தீமையான வசனங்களும், துஷ்டாரம்பங்களும், தீமையாகிய குணங்களும், சதோதயமாயிருக்கின்ற சமத்துவத்தை அடைந்து ஏகமான மனதின் அகத்தில் புகமாட்டாது.

பிரமையும், உபாதியும், களங்கமுமாகிய இவைகள் அல்லாமல் மெய்யாகி மேலான முத்திக் குரிமையாய் வருந்துகின்ற செயலில்லாத தற்பதார்த்த வசத்தில் தொடரும்படியாக மனதைச் செய்யவேண்டும்.

உண்டாகாநின்ற வெகுகாலம் பாழான பயத்தைக் கொடுத்து அசுத்தமாகிய பேதமென்கின்ற பசாசங்கள் தங்காத தற்பதார்த்தத்தில் மனமடையச் செய்யவேண்டும்.

ஆத்மாவை அதன் அறிவினால் அறிதலே சகல துன்பங்களையும் நீக்குதற் கிடமாகும். உமக்குச் சமானமானவர்களுக்கு அது எளிதாகும். என் போலிகளுக் கரியதாம். மேலான வசிட்ட முனியே! தொழில்களுக்கெல்லாம் அதீ

தமாகிய சேடமான முடிவைப்பொருந்தும் இப்படிப் பட்ட பதத்தை மூடத்தில் உண்டாகாநின்ற மதியை யுடையவர்கள் எப்படி அடைவார்கள்?

ஞானதிருஷ்டிக்குச் சமானமாகியும் ஞான நாட்டத்தில் அன்புள்ளதாகியுமிருக்கின்ற சற்குணங்களின் மத்தியின் ஒன்றைப்பெற்றுத் துக்கங்களனைத்தையும் கெடுத்துச் சிறந்த சுகத்தைப் பெருக்கி, மரியாதிருக்கும் காரணமாயிருக்கின்ற குற்றமற்ற பிராண நாட்டமென்கின்ற குணமடைந்தேன்'' என்று புசுண்டமுனி சொன்னார்.

(க—அ) வாசனை முதலிய பற்றுக்கள் யாவையும்கெடுத்துத் தனது ஆத்மஞானத்தைத் தரிசிக்கில் காலன் அணுகானென்று அறிவித்ததாம்.

அப்படிச் சொன்ன புசுண்டயோகியைப் பார்த்து, ''தெரிந்திருந்தும் பிராண நாட்டமென்று நீர் சொல்லியது யாது சொல்லும்'' என்று நான் கேட்டேன். அதற்குப் புசுண்டயோகி சொல்லுவார்.

''நீர் இவ்விடத்தில் எதிரே பார்க்கின்ற ஐம்பூத சரீரமான வீட்டின் மத்தியில் பொருந்தாநின்ற இதய தாமரையான குளிர்ச்சியையுடைய புட்பத்தினிடத்தில் பிராணாபான வாயுவென்று இரண்டு வாயுசேர்ந்து இருக்கும்.

வெளிப்படையாய் மேன்மையாக நெருங்கிய இந்த இரண்டு வாயுவினது வலிமையையுடைய நடையே எப்போதும் வருத்தமில்லாமல் அனுசரிப்பன.

மேலாகிய இதயாகாசத்தில் சூரிய சந்திரர்கள் ஆகாயத்தில் சஞ்சரிப்பன. பற்றுதலுடன் சரீரமாகிய எந்திரத்தைச் சுமந்துகொண்டு சஞ்சரிப்பார்கள்.

நன்றாய் மேலுங்கீழும் சஞ்சரிப்பன. சாக்கிரங்களிலும், சொப்பனங்களிலும், சுழுத்திகளிலும் ஒன்றான சம வடிவத்தையுடையவைகள் முன் சொல்லப்பட்ட பிராணபான வாய்வுகள். பிறகிடாமல் இவற்றினடையின் எப்போதும் அனுசரிக்கின்ற எனக்குச் சுழுத்தி அவத்தையில் நின்றவனுடைய வாசனையைப்போல, விளங்குகின்ற வாசனைகளானவை போயினவாம்.

தாமரைத் தண்டினது ஒரு நூலை ஆயிரம் பங்கு செய்து, அதனில் ஒரு பங்கு சமானமென்றாலும் சமானமாகாமல் மிகவுஞ் சூட்சுமமாய் உண்டாயிருந்தும் எதிர்த்து அந்த வாயுவின் நடையினுடைய குணத்தையறிய அரியதாம். கலத்தலாகிய இப்பிராணனனது விடாமல் அசைகின்ற சத்தியைப் பொருந்தி நீங்காமல் சஞ்சரிக்கின்ற சரீரத்தினுள் ஸ்திரமில்லாமல் புறம்பிலும், அகத்திலும் எக்காலத்தும் திரும்பாமல் மேலே செல்லுதல் தொழிலாகும்.

இரண்டாவதான அபான வாயுவும் அசைவாகிய சத்தியைப் பொருந்தி உட்புறம்பில் நீங்காமல் சஞ்சரிக்கும். பொருந்திய சரீரத்தின் கீழே செல்லும். சாக்கிரத்திலும், சொற்பனத்திலும் இம்மேலான பிராணனனது முழுதுந் திரும்புவது நன்மையாம். இதைத் தெரிந்தவர்களுக்குச் சுக முழுமையும் கொடுக்கும். இந்தப் பிராணன் குணத்தைச் சொல்லக் கேட்பீர். அடையப்பட்ட புறத்தில் பன்னிரண்டங்குலமளவில் செல்லாநின்ற பிராணவாயுவு திரும்பச் சரீரத்தில் புகுதல் பூரகமாகச் சொல்லப்படும்.

புறத்திலிருந்து மிகவும் உள்ளடங்க வருத்தமடையாமல் அபான வாயு சரீரத்தில் புகுதலடையும். திறம் பொருந்திய அதையும் பூரகமென்று சொல்லப்படும். முடி

வாக அபான வாயுவு மறைந்து பிராண வாயுவும் இதயத்தில் மிகவும் எதுவளவும் அசைவற்றிருக்கின்றதோ அதுவரையிலும் கும்பகமென்கின்ற அவத்தையாம். சகல கலைஞானங்களையும் கற்றறிந்த வேதத்தையுடைய வசிட்டரே! மரியாத நல்ல யோகிகள் இதை அனுபவிப்பார்கள்.

பொருந்தாநின்ற இதயாம்பரத்திருந்தும் தன்மனதில் வருத்தமில்லாமல் பிராண வாயுவுகள் வெகுமுக மாகுதல் செய்ய அகத்திற் பொருந்திய இரேசகமாம். புறம்பே நாட்டமிருந்த பிராணவாயுவானது பொருந்திய நாசியினூடுருவி அதனுனிமட்டும் நடையை முன்னே பொருந்த அதனைவெளிப்பூரகமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். விரிவையுடைய நாசிகாந்தத்தினின்று நீங்கிப் பன்னிரண்டங்குலம் பொருந்திய பிராணநடையை வேருன புறப்பூரகமாமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

வெளியில் பிராணவாயுவானது அடங்க, அபானவாயுவானது வெளிப்படாமலிருப்பப் பூரணவவத்தையாய் விளங்கியது புறக்கும்பகமாகும். அபானோதயத்தின் பிரகாச ரூபமான வாயுவி னுட்பார்வையானது திறமான புற ரேசகமாகும். இதுவே மோட்சத்தை அடைவிக்கும். சதா காலமும் தியானிக்கப்படும். தடையில்லாமல் புறம்பிலும் உள்ளிலும் சேராநின்ற கும்பக முதலாக வராநின்ற நடைகளைத் தவிராமல் அறிந்தவர்கள் திரும்பவும் பிறவார்கள்.

நாடாநின்ற பிராண அபானவாயுவின் இயல்பாக யான் சொல்லப்பட்ட இவ்வெட்டுக்கதிகளும் வீட்டைக்கொடுப்பன. இரவும் பகலும் விரும்பத்தக்கன. வேகமில்லாமல் இத்தொழில்களில் கூடினவர்களாய்ப் புறத்தில் செல்லாமல் மனதைக் காப்பவர்கள் குறைவில்லாமல் சிறிது நாட்களில் நிருவாண நிலையைச் சேர்வார்கள். தேடாநின்ற இதை

அப்பியாசஞ் செய்பவர்கள் விடய இச்சையை அடையார்கள். பிராமணர்கள் நாய்த்தோலைத் தொடுவார்களோ?

சென்றாலும், நின்றாலும், சாக்கிரத்தில் சொற்பனத்தில் மேவினாலும், பொருந்தாநின்ற இந்தப்பார்வையையுடையவர்கள் பந்த மடையார்கள். துன்பம் பொருந்தார்கள். அடையத்தக்க பலன்களனைத்தும் அடைந்ததாகும். முன் சொல்லப்பட்ட இருதயகமலத்தில் நின்று உண்டாகிய செல்கின்ற பிராணவாயுவு வெளியில் பன்னிரண்டங்குலப் பிரமாணத்தில் உண்டாகி இருதய கமலத்தில் அடங்கி மாயும்.

கலந்து வருகின்ற வெளியிலிருந்தும் அபானனென்கிற பெருமை பொருந்திய சந்திரனனது சரீரம் யாவையும் குளிரச்செய்விக்கும். பிராணனென்கின்ற சூரியனனது சூடாகச்சொல்லப்பட்ட இச்சரீரத்தினுள்பாகமுண்டாகச்செய்யும். நில்லாமல் சுழலுகின்ற அபானனென்கின்ற சந்திரனிடத்தில் சேராநின்ற இயல்பாகிய கலைகள் பிராணனென்கின்ற சூரியனால் வளமையாகி எவ்விடத்தில் விழுங்கப்பட்டதோ அந்த மேலான பதத்தை அடைந்தால் பின்பொரு துன்பமில்லை.

அந்தப்பிரகாரமே பிராணனென்கின்ற சூரியனிடத்தில் சேர்ந்திருக்கின்றஅழகிய கலைகள்அபானனென்கிறசந்திரனால் எவ்விடத்தில் வாரிவிழுங்கப்பட்டதோ அந்த வலியபதத்தை அடைந்தால் சென்மமானது பின்பு உண்டாகுமோ? அபானவாயுவானது பொருந்திய பிராணவாயுவைப் பக்ஷிக்கும்படி பார்க்க இவ்விரண்டின் மத்தியாக நிற்பவர்கள் எப்போதும் எழுபவத்துன்பத்தை அடையார்கள்.

அசைகின்ற பிராணலயத்தினது பக்கத்திற்பொருந்தி அபானவாயுவின் பக்கத்தையடைந்து பிராணாபான மத்தியிற்கூடிய சிதாத்மாவைத் துதிக்கின்றேன். பொருந்திய

அபானவாயுவின் பிறப்பும் தவிர்ந்து நிற்க, நீண்ட பிராண வாயுவும் இறந்து நிற்க, நாசிகாந்தத்துக்கு நேராகிய ஆகாயத்தில் சிதாத்மாவை நீக்கமில்லாமல் சிந்திக்கின்றேன். ஒரு களங்கமில்லாமல் கலைகள் சூழ்ந்திருக்கின்ற நல்ல திருஷ்டியினால் தேவர்கள் வணங்கா நின்ற பரமபதத்தைஅடைந்தேன்.

என்னுடைய மனமானது பிராணனிஷ்டையில் சொல்லிய இந்த மார்க்கத்தினால் நின்மலமாகிய பரதத்துவத்தில் எப்போதும் ஒப்பற்ற துன்பந்தீர்ந்து அடைகின்றவழி இதுவாகும். இந்தத்திருஷ்டியைப் பிடித்துக்கொண்டு இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் நினைக்கேன். மிகவும்வர்த்தமானகாலத்தின் தன்மையைப் பொருந்துகின்றேன். 'யான் இதை அடைந்தேன்; அடையவேண்டியது இது' வென்று நினைக்கேன். வசிட்டமுனிவரே! அதனால் துன்பமொன்றுமில்லாமல் முடிவற்ற நீண்ட பிராணனை அடைந்தேன். மயக்கம் நீங்கினேன். இன்பமடைந்தவர்களிடத்திலிருந்தால் இன்பத்தையே அடைவேன். துன்பமடைந்தவர்களிடத்திலிருந்தால் துன்பத்தையே அடைவேன். உலகமுழுமையும் உறவாயிருப்பேன். ஆதலினால் தவறுள்ள துன்பங்கெட்டு உயிர்வளர்ந்து சுகித்தேன். மிகவும் உண்டான ஆபத்திலும் மேலான சம்பத்திலும் எவ்வளவும் சலியேன்.

உலகத்திலுள்ளவர்களுக்குப் பொருந்திய சினேகிதனுவேன். அதனால் அகங்காரமில்லாத முனீஸ்வர! துன்பமொன்றுமில்லாத நிறைந்த உயிரைப்பெற்றிருக்கின்றேன். உமது கிருபையினால் இவ்வண்ணம் அளவற்ற ஆயுளை அடைந்தேன். தத்துவஞானமும் நன்றாகப் பெற்றேன்'' என்று புசுண்டயோகி சொன்னார்.

''பகவானே! நீர் சொல்லிய ஆத்துமதத்துவத்தின் குணமானது அழகுள்ள அதிசயம்! இது மிகவும் அதிசயமாம்.

காதுக்கு ஆபரணங்களாகும். இதைக்கேட்பாராயின் யார் அதிசயப்படமாட்டார்கள்?

நல்ல நலத்தையே அடையக்கடவீரென்றும், நிலைபெற்ற சூரியன் மத்தியில் வருங்காலம் இதுவாதலால் தெய்வலோகத்திற்குப்போவேன். நீர் வாழக்கடவீரென்றும், சொல்லி அவரை விட்டு அவ்விடத்திலிருந்து புறப்பட்டு யான் ஆகாயத்தின் மேற் செல்லப் புசுண்டயோகி என்னைவிடாமல் பத்துநாழிகை வழி ஆகாயத்தில் வந்தார். 'ஞானரசமுடைய புசுண்டரே! நிற்பீ'ரென்று வலிமையாக நிறுத்தினேன்.

பரிசுத்த ஞானிகளை நீங்குதல் துன்பமல்லவா? பெரியோராகிய புசுண்டயோகியைவிட்டு முன் கிருதாயுகத்தில் நீங்கினன். திரும்பவும் இரண்டாவது திரேதாயுகத்தில் தரிசனஞ்செய்தேன். மலர்ந்த புட்பமாலையைத் தரித்திருக்கின்ற மார்பையுடைய ஸ்ரீ ராமா! நீ பின்பு அவதாரஞ் செய்தாய். "இந்தக்கதை புசுண்டயோகி அடைந்த மார்க்கம்" என்று நீ அறிந்துகொள்வாய்.

(க—து) உண்மை அனுபவமும், நீண்ட ஆயுளாகிய ஸ்வரூப சாக்ஷாத்காரமும் பெற்றதைத்தெரிவித்ததாம்.

புசுண்டயோகி கதை முற்றிற்று.

வேதாந்த சூளாமணி மேற்கோள்.

விலங்குமுத லனபெறுவ சுழுத்தியொடு கனவாம்
விண்ணவர்க்கு கனவுநரர்க் கம்மூன்றும் மாகுங்
கலங்கலறு மருளர்க்குத் துரியம்வர யோகி
கட்குவரு வதுதுரியா தீதமுதன் மூன்று
மலங்கலுறு மனிதர்க்குத் தமிற்றுமே தோன்றி
வருபந்த மாமேனை யிரண்டுமியோ கத்தா

விலங்குமுத்தி சாதனமா மவைகளிலொன் றிணிலொன்
றிலாமையினாற் காலதே சங்கணிய மம்பொய். (98)

சொற்றவவத் தைகளிலனு சூதனு யறியுந்
துரியனே யுளனனவு கனவிலறி வுண்மை
பெற்றனமச் சுழுத்தியினிற் பெறலுரைப்பி னெழுந்து
பிறிதொன்று மறியாது சுகத்துறங்கி னேனென்
றுற்றதிரு நினைவுமனு பவஞ்சுழுத்தி யதனி
லுறுதுவரா தெனுமருத்தா பத்தியினாற் பொருள்கண்
முற்றுமடக் கிருள்விழிகாண் குதலெனக்கா ரியங்கண்
முழுதையுமுங் கொண்டபே ரவித்தையிரு ளினையும். (99)

அந்தவவித் தையினதுசூக் குமவிருத்தி தன்னி
லலையுமரத் திலையிடையின் வெண்ணிலாத் துளிபோல்
வந்திலங்கி யடங்குநிசா நந்தகூற் றினையும்
வருகாணுந் தராபேட்சை யின்றியே யான்மா
முந்துரைசெய் சுழுத்தியினி லனுபவிக்கை யாலே
மொழிந்ததனி லறிவுளதா மேதுமறி யாமை
நந்துசுகத் துறங்கினே னெனற்கேது விடய
ஞானமிலா மையுங்கும்ப நிவர்த்தியுமா முறையே. (100)

மன்றசுழுத் தியிலதற்குக் காரியவா நந்த
மயவுயிருண் டெனலொருவ ராகிலுமாண் டறிந்தே
னென்றலில தேதுகா ரணமெனிலோர் பொருளை
யெடுப்பதீர் மூழ்கினோ னுண்டுளதென் பதுமேற்
சென்றலது புகலவொணு ததுபோலக் கருமச்
செயலினு லெழுந்துதுணை யாங்கரணங் கூடி
னன்றியதி லறிந்தபொருள் கூறொணு தாகு
மாதலினு லுயிர்சச்சி தாநந்த வொளியாம். (101)

முற்றிற்று.

தத்துவாமிர்தம்.

கலிச்சந்த விருத்தம்.

நித்தமொடு முத்தநிம லந்திகழ்ப ரத்தை
யுய்த்தகர முத்தமணி யத்தினிக ரொப்ப
மெய்த்திடவெ வர்க்குமுண ரத்திகழு விக்கும்
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். 1

சத்தமுறு பித்தினலை தட்டறவு ளத்தே
முத்தியெனு மப்பதமு மூத்திடநி னைக்கிற்
கைத்தலநெ லிக்கனியெ னப்பொருள்வி ளக்கும்
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். 2

பத்தியதின் மெய்க்குரவ னற்பதம துற்றே
சித்தமொரு மித்துறவி னிற்றுறவி யற்றின்
மெய்த்துமுய ரத்துவப ரர்க்கதுவி ளக்கும்
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். 3

கத்ததுறு பித்தசம யக்கவலை விட்டு
நித்தபர மத்தையுணர் தற்றகநி னைக்கின்
மெய்த்தொருக ணத்தினில்வெ ளிப்படநி கழ்த்தும்
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். 4

மத்தமுறு பொய்ப்பவம யக்கறவு ளத்தே
மெய்த்தபர தத்துவம்வெ ளிப்படவெ வர்க்கும்
சுத்தமணி நற்சுடர்வி ளக்கதுவெ றிக்கும்
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். 5

முத்தமொடு நித்தமுறு சுத்தமது புத்த
வத்துவித மப்பரம மத்தினை யுளத்தே
யித்திறனெ னத்திகழு வித்திட விளக்கும்
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். 6

பாடுதுறை—உயிருணி.

கலிவிருத்தம்.

பூதங்களை நானென்றுள போதம்முண ராதே
வாதம்பல சொல்லியவ மேமாய்வுறு வேனை
வேதங்களு மறியாமல ரடிசூட்டிய விகிர்தன்
பேதங்கெட வுள்வந்தமை பேசவறி யேனே 1

பலவொன்றென வறியேன்பக விரவென்பது மறியே
னலதொன்றையு மறியேனறி வானந்தம தறியே
னலனென்றிய மறையீறவை நவில்கின்றிடு பிரமங்
குலவுங்குரு பரனாரெனைக் குறிக்கேடுசெய் தனரே. 2

அன்றாமென வொன்றாயறி வின்றாயறி கின்றா
யொன்றாவது மன்றாயொழி வின்றாயொழி கின்றாய்
நன்றாயது மன்றாய்நடு வின்றாய்முடி வின்றாய்
நின்றாய்ப்பிறி தன்றாயெனை யுண்டாயுள நின்றே. 3

அனுபவரூபம்.

அறுசீர் விருத்தம்.

தத்தமனோவி காரமென்று தற்குண ராது வீடுறப்
புத்தக மோதி மாளுகின்ற புத்தர்முன் னான வாதிகள்
கத்தில்வீ ழாத வாறுவந்து கைக்கொளு நாய னார்தமை
எத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. 1

முத்தனை மூல நாடிலொன்றை முற்படு மாதி மூலனைச்
சுத்தனை மேனி தானிதென்று சுட்டவொ ணாத சோதியைச்
சித்தனை வேறி லாவனந்த சிற்சுக லோக தாயியை
எத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. 2

சிவமயம்.

விளம்பரம்.

மாயாவிசித்திரத்தோற்றம்.

இது வசிட்டமுனிவர் ஸ்ரீ ராமபிரானுக்கு உபதேசித்தருளிய ஞானவாசிட்டத்தினது சாரசங்கிரகம்.

லீலை கதையும், புசுண்டர் கதையும் அடங்கியது.

இதை ஊன்றிப்படித்துணர்வார் உலகம் முதலியன ஒரு மித்தை எனக்கண்டறிந்தும் நித்தியமான தத்துவஞான உதயம் பெற்றும் உய்வார் என்பது திண்ணம். சாதாரண ஜனங்களும் படித்துணருமாறு தெள்ளிய நடையில் எழுதப்பெற்றுள்ளது. விலை அணு 0—3—0

ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள் அருளிச் செய்த

கைவல்ய நவநீதம்.

சுத்தப்பதிப்பு.

இதில் வைராக்கிய டிண்டிமம், மோக்ஷ சாதானக் கிரமம், பிரமசித்தி அகவல், நிர்க்குண பூசை, சொரூபானுசந்தான துதி, பிரம வித்துக்களின் மகிமை, விவேக சட்கம் முதலியன அடங்கியுள்ளன.

பாக்கெட் சைஸ் விலை அணு 0—4—0

பாரதவெண்ணம்.

இது சந்தச்சிதைவு படாவண்ணம் பிரிக்கப்பெற்றுச் சுத்தப்பதிப்பாயச்சிடப்பெற்றது.

விலை பை 0—0—6

விளம்பரம்.

திருத்துருத்தி இந்திரபீடம் ஸ்ரீ கரபாத்திர சுவாமிகள்
ஆதீனம் கரூர் ஸ்ரீமத் சச்சிதானந்தசுவாமிகள் அருளிச்செய்த

ஞானானுபூதித் திரட்டு.

சுத்தப்பதிப்பு.

இதில் வேதாந்த இலக்கணமும், அதிலடங்கிய பாநிலைகுறி, மாயாநிலைகுறி, பந்தவிசார பஞ்சகிருத்தியம், விடுதிவிசார பஞ்சகிருத்தியமும், சுவானுபூதி விநோத விளக்கம், பிரத்தியட்சானுபூதி விளக்கம், ஜீவகாருண்யவிளக்கம், சுவானுபூதி விநோத விளக்கம், உத்தமவாதம், திருக்குதிரிசிய விவேகமும் அடங்கியுள்ளன. நல்லகாகிதத்தில் அச்சிடப் பெற்றது. விலை அணா 0—10—0

ஸ்ரீசேஷாத்திரி சிவனார் அருளிச் செய்த

நாநாஜீவவாதக்கட்டளை.

சுத்தப் பதிப்பு.

இதில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் முதலிய பூதப் பிரிவுகளையும் அவை யாதியாய்த் தோன்றிய தத்துவந் தொண்ணூற்றாறனுள் ஞானதத்துவம், சன்ம தத்துவம் முதலிய உலக உற்பவ காரணங்களையும், சாதாரண ஜனங்களும் தெள்ளிதினுணரக்கூடிய ஆரோப சித்திரப் படத்துடன் நல்ல காகிதத்தில் அச்சிடப் பெற்றிருக்கிறது.

விலை அணா 0—2—0.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புக் ஷாப். புதுமண்டபம், மதுரை.

உ

ஜெம்புக். சு - 6-7-29.

மா-இ ரு கு ராமநாதச் செல்வ கோச்சடை

ஸ்ரீமாநந்த நிலயம்

திருப்பூர்.

அன்பளிப்பு

R.G. துரைப்பாண்டி B.A.

கோச்சடை, மதுரை.